பக்கங்கள்: பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 06 திங்கட்கிழமை (20-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:176

# அடுத்த மாதம் பேச்சு நடக்குமா?
# அது அரசுத்தரப்பைப் பொறுத்தது!

## இப்படிக் கூறுகின்றார் அன்ரன் பாலசிங்கம்

லண்டன்,மே20

**பேச்சு நடக்கும், தமிழ்மக்களின் பிரச்சினை தீரும், சமாதானம் மலரும் என்ற நம்பிக்கையை வளர்ப்பதற்குப் பதிலாக நம்பிக்கையைத் தகர்க்கும் விதத்தில்தான் அரசுத் தரப்பின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன; புரிந்துணர்வு உடன்படிக்கை தடுமாறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் அடுத்த மாதம் தாய்லாந்தில் பேச்சு நடப்பது அரசின் கைகளில்தான் இருக்கின்றது.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.**

நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்குப் பதிலாக அவற்றைச் சிதைக்கும் - அவநம்பிக்கையை ஏற்படுத்தும்- விதத்தில் அரசின் செயல்கள் அமைந்திருப்பது குறித்து இந்த வாரம் லண்டனில் தம்மைச் சந்திக்கவுள்ள நோர்வே சமாதானக் குழுவிடம் தாம் நேரில் முறையிட இருப்பதாகவும் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படும்விதம் என்பன குறித்து அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சரிவர நடைமுறைப்படுத்தி, மக்கள் வாழ்வில் இயல்புநிலையையும் நல்ல சூழ்நிலையையும் ஏற்படுத்தவேண்டும். அதன்பின், புலிகள் இயக்கம்



மீதான தடையை அரசு முற்றாக நீக்கும் படசத்தில் பேச்சு ஆரம்பமாகும் தடை இன்னும் நீக்கப்படவில்லை; புரிந்துணர்வு உடன்படிக்கை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

உடன்படிக்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உறுதுணை புரியவேண்டியவர்கள் முப்படையினர். அவர்களே உடன்படிக்கையை மீறி நடந்து வருகிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி, அது கைச்சாத்தாகி ஒரு மாத காலத்தில் வணக்கத் தலங்களில் முகாமிட்

(10ஆம் பக்கம் பார்க்க)

### தீவகம் செல்ல புலிகளை அனுமதிப்பது:
## கடற்படையின் அறிக்கைக்காக அரசுத்தரப்பு காத்திருக்கிறதாம்!

கொழும்பு,மே20

அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை குடாநாட்டின் தீவுப் பிரதேசத்துக்குள் அனுமதிப்பது தொடர்பாக அங்குள்ள கடற்படை அதிகாரிகளின் அறிக்கை ஒன்றை அரசு எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்திய கடற்படைத் தளபதியிடமிருந்து அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அரசியல் பணிகளை ஆரம்பிப்பதற்கு புலிகள் அங்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என்று அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

தீவுப் பகுதியில் புலிகள் அரசியல் பணியை ஆரம்பிக்க அடுத்த சில தினங்களில் அனுமதி வழங்கப்படும் என்று வடபிராந்திய கடற்படைத் தளபதி பொதுமக்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

(ஐ)

## இந்தியா – இலங்கை இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை

### பேச்சு நடத்த ஹக்கீம் செல்கிறார்

புதுடில்லி,மே20

இந்தியா - இலங்கை இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு - தூத்துக்குடி இடையேயும் தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையேயும் என இரு சேவைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இந்தச் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவென கப்பற் போக்குவரத்துத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் எதிர்வரும் வியாழக்கிழமை இந்தியா வரவுள்ளார்.

நான்கு நாள்கள் விஜயத்தை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மாலிசந்தி படைமுகாம் மூடப்பட்டது

வடமராட்சி,மே20

பருத்தித்துறை மாலிசந்திப் பகுதியில் அல்வாய் மேற்கு சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கடந்த சுமார் ஏழு ஆண்டுகளாக முகாமிட்டிருந்த படையினர் நேற்று அங்கிருந்து வெளியேறினர்.

பாடசாலைக் கட்டடம் மீண்டும் அதன் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த முகாமில் தங்கியிருந்த படையினர் பல்லப்பை இராணுவ முகாமுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனர்.

பாடசாலை அதிபர் கே.பூரணானந்தன் நேற்று படை அதிகாரிகளிடம் இருந்து பாடசாலையைப் பொறுப்பேற்றார்.

இந்தப் படைமுகாம் அகற்றப்பட்டிருப்பதால் மாலிசந்தி பிள்ளையார் ஆலயப் பிரதேசத்திலும் மக்கள் தடையின்றி நடமாட வசதி ஏற்பட்டுள்ளது.

(ஐ-173)

## முச்சந்தி முரளி



...அப்ப எல்லாமே வெறும் கனவுதான் என்று சொல்லுங்கோ...

## தென்மராட்சி வான்பரப்பில் வேவு விமானம் நோட்டம்

கொழும்பு,மே20

விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லாத வேவு விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் நண்பகல் தென்மராட்சிப் பகுதி வான்பரப்பில் பறந்து வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியின் கச்சாய், தனங்களப்பு மற்றும் பூநகரி, சங்குப்பிட்டி பகுதிகளை மையமாக வைத்து இவ்விமானம் பறந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது என்று கூறப்படுகிறது.

இப்பகுதிகளின் வழியாக 2000 ஆண்டின் முற்பகுதியில் புலிகளின் குடாநாட்டுத் தரையிறக்கம் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

பலாலி படைத்தளத்தை அண்டிய வடமராட்சி கடற்பரப்பிலும் இவ்வேவு விமானம் பறந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.(ம)

## 30 புலி உறுப்பினர்கள் இன்று மட்டுநகர் வருகை

### கல்லடியில் அரசியல் பணியகம் திறப்பு

காத்தான்குடி,மே20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள் இன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் இவர்கள் செங்கலடி கறுத்தப்பாலம் வழியாக வருகை தரவுள்ளனர். பொதுநல அமைப்புகளால் இவர்களுக்கு விசேட வரவேற்பு அளிக்கப்படும்.

கல்லடியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பணியகத்தை கரிகாலன் திறந்துவைக்கவிருக்கிறார்.

ஏற்கனவே தாமரைக்கேணி, கிரான்குளம் ஆகிய இடங்களில் புலிகளின் அரசியல் பணிமனைகள் செயற்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 16 அரசியல் பணிமனைகள் திறக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

(ம)

## மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை

### பொலீஸாரிடையே ஏற்பட்ட தகராறு காரணம்

மட்டக்களப்பு,மே20

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் உயிரிழந்தார்.

மூன்று பொலீஸாருக்கிடையில் ஏற்பட்ட தகராறே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

ரயில் நிலையத்தில் இருந்த மூன்று சப்-இன்ஸ்பெக்டர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் -

வாக்குவாதம் முற்றியதில் ஒருவர் திடீரெனத் துப்பாக்கியை எடுத்து மற்றையவரை நோக்கிச் சுட்டதாகவும் -

இதில் ஒருவர் உயிரிழக்க மற்றொருவர் காயமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-10)

### கிழக்குக் கடற்பகுதியில்
# புலிகள் - கடற்படை மோதல் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது!

கொழும்பு,மே20

கிழக்குக் கடலில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படவிருந்த மோதல் ஒன்று நூலிழையில் தவிர்க்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பீரங்கிகள் பொருத்தப்பட்ட படகுகளில் 200இற்கு மேற்பட்ட புலிகள் முல்லைத்தீவு தளத்திலிருந்து வாகரைக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தாலேயே இந்த மோதல் ஏற்படவிருந்ததாகக் கூறப்படுகிறது.

புலிகளின் இப்பயணத்துக்கான ஏற்பாடுகளை அவதானித்து வந்த கடற்படை, அப்பயணத்தை மேற்கொள்ளவேண்டாம் என்று புலிகளின் படகுகளுக்குச் செய்தி விடுத்தது. பயணம் செய்தால் மோதல் ஏற்படலாம் என்ற எச்சரிக்கையையும் விடுத்தது.

இப்பயணம் பற்றிய புலிகளின் கோரிக்கையை கண்காணிப்புக்குழு அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்துக்கு அறிவித்தது.

இக்கோரிக்கை யுத்தநிறுத்த உடன்பாட்டின் விதியை மீறுகிறது என்று சமாதானச் செயலகம் நோர்வே கண்காணிப்பாளர்களிடம் தெரிவித்தது. புலிகள் இப்பயணத்தை மேற்கொள்வதைத் தடுக்குமாறும் அது கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுக்கொண்டது.

எவ்வாறாயினும், இப்பயணத்தை மேற்கொள்ளப்போவதாக புலிகள் நோர்வே கண்காணிப்பாளர்களிடம் தெரிவித்தனர்.

அதையடுத்து, படகுகளை இடைமறிக்குமாறு கடற்படைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதை புலிகளிடம் அறிவிக்குமாறு சமாதானச் செயலகம் நோர்வே கண்காணிப்பாளர்களைக் கேட்டுக்கொண்டது. சமாதானக் குழுவும் அதனை அப்படியே புலிகளிடம் தெரிவித்தது.

ஆனால், பயணத்தை மேற்கொள்வதில் முதலில் உறுதியாகவிருந்த புலிகள், இறுதியில் கடற்படையினருடன் மோதல் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்வதற்காக படகுகளின் பயணத்தை ரத்துச்செய்துவிட்டனர். (ம)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வன்னியிலிருந்து கால்நடைகளை இறைச்சிக்காக கொண்டுவரத் தடை

யாழ்ப்பாணம்,மே20

இறைச்சிக்காக கால்நடைகளை வன்னியில் இருந்து குடாநாட்டுக்கு கொண்டுசெல்வது தவிர்க்கப்பட்டிருப்பதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் அறிவித்திருக்கிறது.

கால்நடைகள் வேகமாக அழிவதையும் அவை தொடர்பான எதிர்கால நலன்களையும் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறை ஊடாக விடுக்கப்பட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள கால்நடை வளம் இராணுவ நடவடிக்கைகளாலும் நோய் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் அழிந்துவரும் நிலையில் தற்போது வளர்ப்புத் தேவைக்கென வன்னிக்கு வெளியே கொண்டு செல்லப்படும் பெரும் எண்ணிக்கையான கால்நடைகள் இறைச்சித் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டுவருவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் வன்னியின் கால்நடைவளம் வேகமாக அருகிச் செல்லும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் அது மேலும் பாதிப்புகளை உருவாக்கலாம். இதனைக் கருத்திற்கொண்டு கால்நடைகளை வன்னிக்கு வெளியே கொண்டுசெல்வோர் பின்வரும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ இடம்பெயர்ந்து வன்னியில் வசித்துவிட்டு மீண்டும் தாங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வோர் தாம் வளர்த்த கால்நடைகளைத் தம்மோடு எடுத்துச்செல்லலாம்.

★ யாழ். மாவட்டத்தில் இருந்து உழவு, வண்டில் தேவைகளுக்காக கால்நடைகளை வன்னியில் வாங்க விரும்புவோர் தமது பகுதி விவசாய சம்மேளனங்களின் சிபார்சுடன் கோட்ட அரசியல் பொறுப்பாளரின் அனுமதிக்கடிதம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் வன்னியில் உள்ள மாவட்ட பொருண்மிய பொறுப்பாளரின் அனுமதியும் பெறவேண்டும்.

★ தற்போதைய சூழ்நிலையில் எதிர்கால நன்மை கருதி கால்நடைகளை இறைச்சித் தேவைக்காக வன்னிக்கு வெளியே கொண்டு செல்வது தவிர்க்கப்பட்டுள்ளது. (ஐ)

## சைக்கிள் முதல் எந்த வாகனமும்

# 'லைற்' இன்றி வீதியில் சென்றால் பொலீஸார் மடக்கிப் பிடிப்பர்!

யாழ்ப்பாணம்,மே20

இரவு வேளைகளில் 'லைற்' இன்றி எந்தவொரு வாகனமும் போக்குவரத்தில் ஈடுபடக்கூடாது. லைற் இன்றி செல்வோர் பிடிபட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி உடுவெல தெரிவித்துள்ளார்.

குடாநாட்டுப் பகுதிகளில தற்போது போக்குவரத்து நெருக்கடி அதிகரித்துள்ளது. இரவிலும் கூட மக்கள் நடமாட்டம் அதிகரித்திருக்கும் அதே சமயம், வாகனங்களும் அதிகளவில் வந்து போகின்றன. இதனால் விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன. விபத்துக்களைக் கட்டுப்படுத்து முகமாக வாகனங்களில் முன்னுக்கும் பின்னுக்கும் (சிக்னல்) 'லைற்' பொருததியிருக்க வேண்டும். இந்நடைமுறை இம்மாதம் 15ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் இவ்வளவு காலமும் சைக்கிள்களுக்கு இவ் விதி தளர்த்தப்பட்டிருந்தது. இன்றிலிருந்து சைக்கிள்களில் பிரயாணம் செய்வோரும் மேற்படி நடைமுறையை பின்பற்றவேண்டும். இந்த விதியை மீறுவோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் அதிகாரி உடவெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அண்மைக்காலமாக நடைபாதை வியாபாரம் நகரப் பகுதி வீதியோரங்களில் தீவிரமடைந்திருப்பதால் அங்கு பொருள்களை வாங்கும் பொருட்டு ஒன்றுகூடும் மக்கள் தமது வாகனங்களை (சைக்கிள் உட்பட) பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்திவிட்டு வரவேண்டும். 'இவ்வாறு மேற்கொள்ளாதவர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றும் குறிப்பிட்டார். (க-ரி)

# பிரபாகரனை நாடு கடத்துமாறு காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்து

சென்னை,மே20

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் நாடுகடத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தும் என்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி கூறுகிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் உபதலைவர் இரா.அன்பரசு தனக்கு அனுப்பிய கடிதத்துக்கான பதிலிலேயே சோனியா இவ்வாறு கூறியுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் பிரபாகரனை நாடு கடத்தக்கோரும் பிரேரணை நிறைவேற்றப் படவேண்டும் என்று அன்பரசு தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரபாகரன் நாடுகடத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை காங்கிரஸ் கட்சி அடிக்கடி மத்திய அரசிடம் பிரஸ்தாபித்து வருவதாகவும் சோனியா தனது பதிலில் தெரிவித்திருக்கிறார்.

பிரபாகரன் நாடுகடத்தப்படும் விடயத்தை மத்திய அரசிடம் எடுத்துச் செல்லாதது குறித்து தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சித் தலைவர்கள் சோனியாவைக் குற்றஞ்சாட்டுவது குறித்து தான் வேதனை அடைந்திருப்பதாகவும் அன்பரசு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (ம)

### ரூபவாஹினியில் நாட்டுக் கூத்து

யாழ்ப்பாணம்,மே20

செல்லையா மற்றாஸ்மெயிலின் நெறியாள்கையில் உருவான 'வேழம படுத்த வீராங்கனை' நாட்டுக் கூத்தின் இரண்டாவது பகுதி இன்று மாலை 6மணிக்கு ரூபவாஹினி தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படவுள்ளது. (ஐ)

### துணைவேந்தர்களுக்கான மாதாந்தக் கூட்டம் யாழ்ப்பாணத்தில்

நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் வேந்தர்கள், துணைவேந்தர்கள், இயக்குநர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இம்முறை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காகமேற்படி பிரதிநிதிகள் இந்தமாத இறுதியில் யாழ்.வருகை தருவர் எனக் கூறப்பட்டது. (எ-ரி)

## ஒரு வருடத்துக்கு முன் பொருத்தப்பட்ட

# சி.ரி.ஸ்கானர் இயந்திரத்தை இயங்கவைக்க நடவடிக்கை

## கொழும்பிலிருந்து பொறியியலாளர் குழு வந்தது

யாழ்ப்பாணம்,மே20

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வருட காலத்திற்கு முன் பொருத்தப்பட்ட சி.ரி.ஸ்கானர் - உள்ளுறுப்புக்களில் ஏற்படும் நோய்களை கணனித் திரையில் பார்த்துக் கண்டறியக்கூடிய இயந்திரம் - இயந்திரத்தை இயக்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வியந்திரம் பொருத்தப்பட்ட காலத்தில் இருந்தே இயங்கமுடியாத நிலையில் இருந்து வந்தது.

தற்போது நிர்வாகத்தின் தீவிர முயற்சியின் பயனாகக் கொழும்பில் இருந்து நேற்று வருகை தந்த பொறியியல் நிபுணர் குழு ஒன்று அந்த இயந்திரத்தை இயக்க வைப்பதற்கான (திருத்தவேலைகள்) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ம-15)

### முகாமையாளர் நியமனம்

அச்சவேலி,மே20

அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையின் புதிய முகாமையாளராக எஸ்.சண்முகலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (எ-11)

# வடக்கில் திட்டமிடப்படும் பொருளாதாரக் குடியேற்றம்

பொருளாதாரச் சுதந்திரமற்ற அரசியல் சுதந்திரம் அர்த்தம் அற்றது என்பது பொய்யாமொழி. யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்கின்றோம் என்ற போர்வையில் தென்பகுதியிலிருந்து வர்த்தக, கைத்தொழில் அதிபர்கள், தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் படையெடுத்தவண்ணம் உள்ளன. பங்காளித்துவ முதலீடு என்ற அடிப்படையில் களநிலைமையை ஆராய்ந்து தங்கள் நோக்கங்களுக்கு பயன்படுத்த முனைகின்றனர் இவர்கள். இதற்கு இங்குள்ள சில வர்த்தகப் பிரமுகர்களும், உயர் அரச அதிகாரிகளும் வசதி செய்து கொடுக்கின்றனர்.

பத்து வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணச் சந்தை திறக்கப்பட்டதனால் ஐந்து லட்சம் மக்கள் மத்தியில் தங்கள் பொருள்களை இலகுவாக சந்தைப்படுத்த கொழும்புக் கம்பனிகள் முயற்சி செய்கின்றன. அதற்கு யாழ்ப்பாணத்தில் முகவரிகளையும் அவர்கள் தேடுகின்றனர். இதன் விளைவு என்ன என்பதைப் பற்றி மக்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

### மக்களின் பொருளாதார நிலை

1990 தொடக்கம் 1995ஆம் ஆண்டுவரை பொருளாதாரத் தடை இங்கு விதிக்கப்பட்டதினால் மக்கள் வருமானம் ஈட்டுவதில் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அக்காலப் பகுதியில் கிட்டத்தட்ட 40 தொடக்கம் 50 வீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

1996 தொடக்கம் 2001ஆம் ஆண்டுவரை பிரகடனப்படுத்தாத பொருளாதாரத் தடை யாழ்.மக்கள் மீது திணிககப்பட்டு ஒரு திறந்த சிறைச்சாலையில் மக்கள் அடைக்கப்பட்டுக் கிடந்தனர். 70-80 வீதமான மக்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

2002ஆம் ஆண்டில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபோதிலும் இன்றுவரை உற்பத்தி முயற்சிகளான விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் முதலியவற்றில் முன்னேற்றம் காணப்படவில்லை. விவசாயத் துறையில் 90 ஆயிரம் குடும்பங்களும் மீன்பிடித்துறையில் 14 ஆயிரம் குடும்பங்களும் தங்களது ஜீவனோபாயத்திற்குத் தங்கியிருக்கின்றார்கள். அதனால் பெரும்பாலான மக்களின் நிலையோ மிகவும் பரிதாபகரமாகவுள்ளது. அத்துடன் அவர்கள் கொள்வனவு சக்தி குறைந்தவர்களாகவும் உள்ளனர்.

இந்த நிலையை மாற்றுவதற்கு அரச உயர் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அவை குறித்து அவர்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

### தனியார் துறை

தனியார் துறையை இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அ.வர்த்தகத்துறை

ஆ.கைத்தொழில் துறை.

கைத்தொழில் துறையில் இரு பிரிவுகள்.

1. உற்பத்தித்துறை
2. நிர்மாணத்துறை என்பதாகும்.

போரின் விளைவுகளால் இத்துறைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின. அர்த்தமுள்ள புனர்வாழ்வு, புனரமைப்புக் கொள்கை வகுக்கப்பட்டு இத்துறைகளுக்கு நட்டஈடு கொடுதது புத்துயிர் ஊட்டி படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். போர்ப் பிரதேசத்துக்கென விசேட கட்டுப்பாடுகள், நடைமுறைகள் முன்பிருந்தன. அதேபோல் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என பிரகடனப்படுத்தி விசேட சலுகைகள், வசதிகள் வழங்கப்பட்டு வழமைக்குக் கொண்டுவருவது அத்தியாவசியமாகும். அதற்கு மாறாக, குறுக்கு வழியாகத் தென்பகுதியில் இருந்து வர்த்தகர்கள், கைத்தொழிலாளரை வரவழைத்து முதலீடு செய்விப்பது மிகவும் விசித்திரமாகவுள்ளது.

முதலீடு செய்பவர்களின் முக்கிய நோக்கம் எவ்வளவு இலாபம் ஈட்டலாம், எவ்வளவு பணத்தை விரைவில் கொழும்பிற்குக் கொண்டு செல்லலாம் என்பதாகும். இந்நிலையில் கொள்வனவு சக்தியின்றித் தத்தளிக்கும் மக்களின் ஒரு பகுதிச் சொத்து தென்பகுதிக்குக் கடத்த வழிபிறக்கின்றது. அத்தோடு இங்கு பலவீன பங்காளிகளாக உள்ளவர்கள் பெயரளவில் மட்டுமே பங்காளிகளாக இருப்பார்கள். நடைமுறையில் பிரதான கட்டுப்பாடு மையம் (Main Switch) தெற்கிலேயே நிலைகொள்ளப்போகிறது. எதிர்காலத்தில் இந்த ஒழுங்குமுறை ஏற்படுத்தக்கூடிய பாதிப்பைப் பற்றி ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

### யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம்

புதிய தொழிற்சாலைகளை நிறுவி உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் உருவாக்க எத்தனைபேர் முன்வந்துள்ளனர்? இங்கு சுயமாக எடுக்கும் முயற்சிகளுக்கு எவ்வளவு ஆதரவு கொடுக்கப்படுகின்றது? கடந்த பன்னிரண்டு வருடகாலத்தில் யாழ். மக்களின் சேமிப்பை அதாவது மாதாந்தம் ரூபா 100 மில்லியனை இங்குள்ள வங்கிகள் தெற்குக்குக் கடத்தின என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஒரு சிறிய தொகையை மட்டுமே இங்கு சிறு கடன்களாக இவர்கள் கொடுத்தனர்.

### அரச சார்பற்ற துறை

இத்துறையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:-

1. வெளிநாட்டு நிறுவனம்
2. தேசிய நிறுவனம் (கட்டுப்பாட்டு மையம் கொழும்பு)
3. உள்ளூர் நிறுவனம் என்பனவே அவையாகும்.

1990 தொடக்கம் 1995 வரை பொருளாதாரத் தடையினால் வளப்பற்றாக்குறை இருந்தது. இந்நிலையில் அரச, அரசசார்பற்ற (உள்ளூர், வெளியூர்) நிறுவனங்கள் எமது இணையத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டு நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டன. 1996 - 2001வரை நிறுவனச் செயற்பாடுகளுக்கு அரசினால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. படிபடியாகக் கட்டுப்பாடுகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தளர்த்தப்பட்டன. உள்ளூர் நிறுவனங்களுக்கு பல இழுத்தடிப்புகளின் பின் கட்டுப்பாடுகளை அரசு தளர்த்திய பொழுதும், உயர் அரச அதிகாரிகள் தந்திரோபாயங்களைக் கையாண்டு எமது நிறுவனங்களை நசிக்கிவந்தனர். அதனால் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு அவை பலவீனமாயின. இந்நிலையில் கடந்த 6 வருட காலத்தில் மக்களுடைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, குரல் எழுப்பி, ஆதரவுப் பிரசாரம் மூலம் பல்வேறு அழுத்தங்களை அரசுக்குக் கொடுத்தும் அவசிய நேரங்களில் பல வடிவிலான ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினோம். நிவாரணப் புனர்வாழ்வுத் திட்டங்களில் காணப்பட்ட முக்கிய குறைபாடுகளை வெளிக்கொணர்ந்து கடந்த அரசின் மயாஜாலத்தை உலக அரங்கில் அம்பலப்படுத்தினோம். வலி.வடக்குப் பிரதேசத்தைப் பாதுகாப்புப் படைகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க, அரச அதிகாரிகளால் வகுக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தினோம்.

### 2002ஆம் வருடம்

இன்று ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்த நிலையைத் தொடர்ந்து புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் பெரிய எடுப்பில் இடம்பெறக்கூடும். வெளிநாட்டு நிதியும் வந்து குவிய வாய்ப்புண்டு. இந்நிலையைப் பகுப்பாய்வு செய்த சில தேசிய நிறுவனங்கள் இங்கு காலூன்றத் தொடங்கிவிட்டன. இங்குள்ள மக்கள் அவலப்பட்ட காலத்தில் எள்ளளவும் கவலைப் படாதவர்கள், அனுதாபம் கூடத் தெரிவிக்காதவர்கள் இப்பொழுது மனிதாபிமான சேவையில் ஈடுபடப் போகின்றோம் என்பதின் உள்நோக்கம் என்ன....? பணம் தேடுவதற்கு தற்பொழுது வாய்ப்பான சந்தை யாழ்ப்பாணம். இங்கு கெட்டித்தனமான வியாபாரத்தில் ஈடுபட்டால் பணத்தைத் தோண்டி கொழும்பிற்குக் கொண்டு சென்றுவிடலாம் எனறு அவர்கள் எண்ணுகின்றனர்.

கடந்த காலங்களில் அரசு வரைந்த யாழ்ப்பாண அபிவிருத்தி ஓவியத்திற்கு அழகிய வர்ணம் தீட்டியவர்கள் உயர் அரச அதிகாரிகளே. அரசு மாறினாலும் அரச இயந்திரம் மாறவில்லை. அத்தோடு அதிகாரிகளின் மனப்பான்மையும் மாறவில்லை. உள்ளூர் நிறுவனங்கள் திறன் குறைந்தன என்ற பொய்ச் சிபார்சுகளைச் செய்து புனர்வாழ்வு வேலைகளிலிருந்து இப்பொழுதும் நீக்கிவிட முயறசிக்கின்றார்கள் அவர்கள். அதன் மூலம் கொழும்பு நிறுவனங்கள் இங்கு வேலைகளை மேற்கொள்வதற்கு வழிவகுப்பதுமல்லாமல் பேராதரவும் கொடுக்கிறார்கள். வாடிய மரத்திற்கு நீர் பாய்ச்சினால் எப்படித் துளிர்க்குமோ அதுபோல் உள்ளூர் நிறுவனங்களுக்கு நிதிவளத்தைக் கொடுததால் அவர்கள் செயற்றிறன் பல்கிப் பெருகும் என்பதில் ஐயமில்லை. 1995ஆம் ஆண்டிற்கு முன் அவர்கள் ஆற்றிய பணிகளை மக்கள் மறந்து விடவில்லை.

இங்கு தற்பொழுது நடப்பவற்றைத் தொகுத்து, பகுப்பாய்வு செய்யும்போது தெற்கிலிருந்து வடக்கில் பொருளாதாரக் குடியேற்றம் ஒன்று திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது என்பது புலனாகின்றது. இதை நாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிடின் சமாதான யாத்திரையில் ஏமாந்த சோணகிரிகளாவோம். இது விடயத்தில் மக்களை விழிப்பாக இருக்கும்படி வேண்டுகின்றோம். இது தொடர்பான பல்வேறு அபிப்பிராயங்களையும் வரவேற்கின்றோம்.

☆

## எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில்

# பாகிஸ்தானியப் படையுடன் இந்திய இராணுவம் மோதல்!

### பரஸ்பரம் கடும் ஷெல் வீச்சு!!

லண்டன்,மே20

காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு நெடுகிலும் இந்திய மற்றும் பாகிஸ்தானிய இராணுவத்தினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தியாவுக்கான பாகிஸ்தானியத் தூதரை இந்தியா வெளியேற்றியதை அடுத்து மூண்ட இந்த மோதல் நேற்றும் தொடர்ந்தது.


மோதல் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேறும் பொதுமக்கள்.

காஷ்மீரில் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு - காஷ்மீருக்கும், பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆஷாத் - காஷ்மீருக்கும் இடையிலான எல்லையாக இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பரஸ்பரம் மேற்கொள்ளும் தாக்குதல்களில் பொதுமக்கள் வாழும் இடங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் -

பொதுமக்கள் உட்பட இரு தரப்பிலும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் -

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் விழுந்து வெடித்ததில் ஐந்து பாகிஸ்தானியப் பொதுமக்கள் உயிரிழந்ததாக பாகிஸ்தானியப் பொலீஸார் தெரிவித்தனர்.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இருநாட்டுப் படையினரும் சிறு அளவில் மோதலில் ஈடுபடுவது புதிதல்ல என்ற போதிலும் தற்போதைய நிலைமையினால் இத்தாக்குதல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. (ஒ)

## படை நடவடிக்கைக்கு இந்தியாவில் ஆதரவு

பாகிஸ்தான் மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள இந்தியாவில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தியாவில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருப்பதாக குற்றஞ்சாட்டிய இந்திய அரசு, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பாகிஸ்தானின் தூதரை நாட்டைவிட்டு வெளியேற்றியது.

இந்த நிலையில் தூதரை வெளியேற்றியது மட்டும் போதாது; பாகிஸ்தான் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய்க்கு அழுத்தம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி உட்பட இந்திய அரசியலின் முக்கிய தலைவர்கள் பலரும் பாகிஸ்தான் மீது வாஜ்பாய் அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்துள்ளனர். (ஒ)

## பாக். இராணுவத்தினரை தயார்ப்படுத்தும் முஷாரப்

இஸ்லாமாபாத்,மே20

போர்ப் பதற்றம் காரணமாக பாகிஸ்தானிய இராணுவத்தை முழுஅளவில் தயாராகுமாறு பாகிஸ்தானிய அதிபர் பர்வேஷ் முஷாரப் அறிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு முஷாரப் ஆட்சியைப் பிடித்த பின்னர் இராணுவ அதிகாரிகளில் பலர் நாட்டின் நிர்வாகப் பணிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களை இப்போது உடனடியாக அண்மையில் உள்ள இராணுவ முகாம்களில் இராணுவப் பணியில் சேருமாறும் முஷாரப் உத்தரவிட்டுள்ளார்.

இதேசமயம், பாகிஸ்தானியப் படைகளின் பிரதான படையணிகள் இந்திய எல்லை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக உள்ளூர் மக்களை மேற்கோள்காட்டி சுயாதீன செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ)

## சியாராலியோனில் கபா வெற்றி!

உள்நாட்டுப் போரின் பின்னர் முதல்தடவையாக சியாராலியோனில் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் அஹமட் டேஜன் கபா வெற்றி பெற்று மீண்டும் பதவியில் அமரவுள்ளார்.

சியாராலியோனில் அமைதியை ஏற்படுத்தியதில் முழுப் பங்கும் தனக்கே உரியது என அதிபர் கபா தேர்தல் பிரசாரத்தின் போது கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அயர்லாந்தில் ஆளும்கட்சி வெற்றி

அயர்லாந்தில் நடந்த தேர்தலில் ஆளுங்கட்சி வெற்றிபெற்றுள்ளது. நாடாளுமன்றத்தின் 166 இடங்களுக்கு நடந்த தேர்தலில் பிரதமர் பெர்டி அக்ரனின் கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

## பயணிகள் கப்பலில் திடீர் தீ!

பிரிட்டனின் துறைமுக நகரான நிகாஸ்டிலிலிருந்து சுவீடனின் கோதன்பேர்க்குக்கு 884 பேருடன் சென்றுகொண்டிருந்த பயணிகள் கப்பலில் திடீரென்த் தீப்பிடித்தது. ஆனாலும் அதிர்ஷ்டவசமாக கப்பலில் இருந்த அனைவரும் காப்பாற்றப்பட்டுவிட்டனர்.

உலக அரங்கில்

டென்மார்க் நாட்டின் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான 'பிரின்சஸ் ஒவ் ஸ்கன்டிநேவியா' என்ற இந்தக் கப்பலில் 758 பிரயாணிகளும் 126 பணியாளர்களும் இருந்ததாகவும் -

நடுக்கடலில் கப்பல் சென்றுகொண்டிருந்தபோது இயந்திரக் கோளாறால் தீப்பிடித்துப் பரவியதாகவும் -

அபாய சமிக்ஞை எழுப்பப்பட்டதையடுத்து அப்பகுதியில் சென்ற வேறு கப்பல்கள் பயணிகளை மீட்டு, தீயை அணைக்க உதவியதாகவும் - கூறப்படுகிறது. (ஒ)

## தென்கொரிய அதிபரின் மகன் ஊழல் வழக்கில் கைதானார்!

சியோல்,மே20

தென்கொரிய அதிபர் கிம்டே ஜுங்கின் இளைய மகன் கிம் ஹொவ்கல் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கிம் ஹொவ்கல்

ஏற்கனவே கைது செய்யப்பட்ட தொழிலதிபர் ஒருவர், தான் கடந்த வருடம் ஹொவ்கல்லுக்கு 23லட்சம் அமெரிக்க டொலர்களை லஞ்சமாகக் கொடுத்ததாகக் கூறியிருந்தார். இது தொடர்பாகவே ஹொவ்கல் கைதுசெய்யப்பட்டார்.

அதிபரின் இரண்டாவது மகன் கிம் ஹொவ் அப் தந்தையின் பெயரைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் விசாரணையை எதிர்கொண்டுள்ளார். இந்தச் சமயத்தில் இளைய மகனும் கைது செய்யப்பட்டிருப்பது அதிபர் ஹிம்மின் செல்வாக்குக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையில், தனது குடும்பத்தைச் சேர்ந்தோர் இழைத்த தவறுகளுக்காக நாட்டு மக்களிடம் தான் மன்னிப்புக் கேட்பதாக அதிபர் ஹிம் தெரிவித்துள்ளார். (ஒ)

## அதிகார சபை மறுசீரமைப்பு குறித்து அரபாத்துக்கு அழுத்தம்

பலஸ்தீன அதிகார சபையை மறுசீரமைக்க பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கு அழுத்தம் அதிகரித்து வருகிறது.

இதனையடுத்து பலஸ்தீன நிர்வாகக் குழு பலஸ்தீனப் பிரதேசத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக நேற்றுக்கூடி ஆராய்ந்தது.

இதேவேளை, தனது செல்வாக்குக்குட்பட்ட பலஸ்தீன அதிகார சபை மறுசீரமைக்கப்படும் என்று அரபாத் அளித்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றுவது சந்தேகத்துக்கிடமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

1996ஆம் ஆண்டுக்குப் பின் தேர்தலைச் சந்திக்காத பலஸ்தீன அதிகார சபை மாற்றியமைக்கப்பட்டாலே சமாதானப் பேச்சைத் தொடர முடியும் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

ஆனால், அரபாத்தோ பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலகினாலேயே மறுசீரமைப்புக் குறித்து சிந்திப்பதாகத் தெரிவித்துள்ளார். (ஒ)

## பேர்லின் சடலம் மீட்பு?

வாஷிங்ரன்,மே20

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்லினுடையது என்று சந்தேகிக்கப்படும் சடலம் ஒன்றை பாகிஸ்தானியப் பொலீஸார் தோண்டி எடுத்துள்ளனர்.

கராச்சியின் புறநகர்ப் பகுதி ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த இந்தச் சடலத்தை பேர்லினுடையது என்று பாகிஸ்தானியப் பொலீஸார் கூறியுள்ளபோதிலும் அமெரிக்கா இதனை உடனடியாக ஏற்க மறுத்துள்ளது.

மரபணு மற்றும் தடயவியல் பரிசோதனைகள் முடிந்து, அந்த அறிக்கைகள் பெறப்பட்ட பின்னரே இது தொடர்பாக முடிவெடுக்கப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ஒ)

## மக்கள் எழுச்சியின் வெற்றி!

உலகின் 192ஆவது சுதந்திர நாடாக நேற்று நள்ளிரவு கிழக்குத் திமோர் மலர்ந்தது. போர்த்துக்கேயரின் ஆளுகைக்கும் பின்னர் இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்புக்கும் எதிராக தேசியத் தலைவர் சனானா குஸ்மாவோ தலைமையில் போராடிய கிழக்குத்திமோர் மக்கள் தமது வெற்றிக்களிப்பில் இப்போது திளைக்கின்றனர். இந்தோனேஷிய ஆக்கிரமிப்புக்கு எதிராக அவர்கள் கடந்து வந்த பாதையில்....


இந்தோனேஷிய ஆதரவுக் குழுக்களின் வெறியாட்டத்தால் 2லட்சம் கிழக்குத் திமோரியர்கள் அகதிகளானார்கள்.


1999இல் இடம்பெற்ற சர்வஜனவாக்கெடுப்பில் 99 விதமான திமோரியர்கள் சுதந்திரத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.


மக்கள் சக்தியைக் கண்டு மிரண்டுபோன இந்தோனேஷிய அரசு, கிழக்குத் திமோரின் தேசியத் தலைவர் குஸ்மாவோவை சிறையில் இருந்து விடுவித்தது.


ஐ.நா. அமைதிப்படை ஆஸ்திரேலிய இராணுவத் தலைமையில் 1999 செப்ரெம்பரில் கிழக்குத் திமோரில் தரையிறங்கியதை அடுத்து ஐ.நா. நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது.


புலம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான கிழக்குத் திமோரியர்கள் தாய்நாடு திரும்பினர்.


அரசமைப்பு சபைக்கு 2001 இலும், 2002 ஏப்ரலில் அதிபர் பதவிக்கும் தேர்தல்கள் நடந்தன. தமது தேசியத் தலைவர் சனானா குஸ்மாவோவை நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுத்து தமது எழுச்சிமிக்க நன்றியை வெளிக்காட்டினர் கிழக்குத்திமோர் மக்கள்.



ஊர்காவற்றுறை பிரதேச கலாசாரசபை நடத்திய சாகித்திய விழா நிகழ்வுகள் அண்மையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிகவியல்துறைத் தலைவர் க.தேவராஜா, தமிழேந்தல் மா.க.ஈழவேந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் இரு படங்களிலும், பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். பிரதம விருந்தினரான இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், மதியுரை விருந்தினர்களான சென்னைப் பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி இரா.கோபாலகிருஷ்ணன், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் என்.பரமசிவம், கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலய அதிபர் பண்டிதர் சு.வேலாயுதபிள்ளை, விழாவின் தலைவரும், ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பகுதிகளுக்கான உதவி அரச அதிபருமான ஜே.எக்ஸ் செல்வநாயகம் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (எ)

# பல்கலைக்கழக விசேட அனுமதியில் இந்த ஆண்டுமுதல் மனைப்பொருளியல்

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும் முறை, காலத்திற்கு ஏற்ப மாறிக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் வெட்டுப்புள்ளிகள் மாணவர்களைத் திணறடிக்கின்றன. இத்தகைய மாற்றங்களால் அனுமதிக்கப்படும் மாணவர்களின் அளவும் பாதிக்கப்படுகிறது. கலை, வர்த்தகம், விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல எனப் பலவாறாக பாடங்களைப் பிரித்து அவற்றிற்கேற்ப விகிதாசாரத்தின்படி அனுமதிகளை வழங்கினாலும் நாட்டின் பாடசாலைகளுக்கிடையிலும், தனிப்பட்ட ரீதியிலும் இம்முறையை அமுலபடுத்துவதில் பாரிய சிக்கல் களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினர் எதிர்நோக்குகிறார்கள் இதனைச் சமாளிக்கவும் அவாகளால் முடியவில்லை.

குறிப்பாக கலைப்பிரிவு மாணவர்களைப் பொறுத்தவரை நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் பலவகையான பாடங்களைக் கற்கை நெறியாகக் கொண்டுள்ளன. இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பல பாடங்கள் புதிதாக இந்தக் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மானிய ஆணைக்குழுவினர் கலைப்பாடங்களைப் பொறுத்தவரை இருவகையான பல்கலைக்கழக அனுமதியை நடைமுறையில் கொண்டுள்ளனர்.

1. சாதாரண அனுமதி
2. விசேட அனுமதி (Special intake)

சாதாரண அனுமதி முறையில், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளிக்கு மேலே புள்ளிகளைப் பெற்றவர்கள் பல்லைக்கழகததிற்கு உள்வாங்கப்படுகிறார்கள். இவர்களின் தெரிவுப் பாடங்களாக அங்கீகரிக்கப்பட்ட கலைப் பிரிவைச் சேர்ந்த எல்லாப் பாடங்களும் அமையும். ஆனால், விசேட அனுமதி முறை என்பது, பல்கலைக் கழகத் தெரிவுக்கு உட்படாமல், வாய்ப்புக் கிடைக்காமல, ஆனால் ஓரளவுக்கு வெட்டுப்புள்ளிக்கு அண்மித்ததாகப் புள்ளிக்கள்பெற்றவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இவர்கள் க.பொ.த. (உயர்தர) பிரிவில் கற்ற பாடங்களின் அடிப்படையில் நேரடியாகவே அந்தந்தப் பாடங்களுக்கு தெரிவுசெய்யப்படுகிறார்கள்.

உதாரணமாக க.பொ.தவில் இந்து நாகரிகத்தையோ கிறிஸ்தவ நாகரிகத்தையோ ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திலும் அந்தப் பாடத்தையே தொடர்ந்து கற்க வேண்டும். அவர்கள் பல்கலைக கழக வாழ்நாளில் (3 அல்லது 4 வருடங்கள்) தொடர்ந்து இப்பாடத்தையே கற்கவேண்டும். இவர்கள் விருப்புப் பாடமாக மற்றைய பாடங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம். அதுமட்டுமன்றி இப்பாடத்தை மட்டும்தான் (இந்துநாகரிகம்) சிறப்புப் பாடமாகக் கற்கமுடியும். ஏனைய பாடங்களை அவ்வாறு கற்கமுடியாது.

மேற்கூறிய விசேட அனுமதிக்குட்பட்டு பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படாத பாடங்களாகவும் பல கற்கை நெறிகளை ஆணைக்குழுவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். அதில் முக்கியமாக மொழியியல், ஆங்கில இலக்கியம் (யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை உயர் வகுப்பில் அதனைக் கற்பிப்பது மிகமிகக் குறைவு, அரிதென்றே கூறலாம்) சைவ சித்தாந்தம், தொல்லியல், மானிடவியல், மனைப்பொருளியல் என்பவை குறிப்பிடத்தக்கவை. ஒரு சில பாடசாலைகளில் மனையியல் உயர்தர வகுப்பில் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய புதிய நெறிகள் மாணவர்கள் மத்தியில் பிரபல்யமடையாத பாடங்களாகும். ஆனால் இவை மாணவர்களுக்கு மிகவும் நல்ல வழிகாட்டியாக எதிர்காலத்தில் அமையக்கூடியவை.

முக்கியமாக இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு பாடநெறி மனைப் பொருளியல் ஆகும். இப்பாடநெறி முதன்முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வியாண்டில் (2001 - 2002) பல்கலைக்கழக அனுமதி முறையில் மனைப் பொருளியல் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்கள் தற்போது கல்வியைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். இது தான் முதல் வாய்ப்பென்பதால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு ஆனால் இதன் முக்கியத்துவம் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்படுமானால் தொடர்ந்து பலர் இதனைத் தொடர்ந்து கற்க ஆர்வமாக முன்வருவார்கள் என நினைக்கிறோம்.

பல பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் மட்டுமே மனையியல் என்ற பாடம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் உயர்தரத்தில் இதனைக் கற்பிப்பதுமில்லை; மாணவர்கள் கற்க முன்வருவதுமில்லை. இது எமது அறியாமை. அதைக் கற்பதால் எதிர்காலம் இல்லை. பெண்கள் மட்டுமே கற்கவேண்டும். ஆண்கள் கற்பது தவறு; கற்க முன்வருவதுமில்லை. இத்தகைய மனப் பாங்கு மாறவேண்டும். ஏனெனில் இவ்வளவு காலமும் இப்பாட நெறி பல்கலைக்கழக மட்டத்தில் இருந்ததில்லை. ஆனால் தற்போது அது ஒரு பாட அலகாக பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுததப்பட்டுள்ளதால், பல மாணவர்களுக்கு இதனால் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே உயர் வகுப்பு மாணவர்களே ஏனைய பாடங்களைப் போன்று இப்பாடத்தையும் ஒன்றாகக் கற்க முன்வாருங்கள். பல பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் இதற்காக முன்னின்று இப்பாடத்தை உயர்தர வகுப்பில்

**சுபதினி ரமேஷ்**
இணைப்பாளர்,
மனைப்பொருளியல்,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஒரு பாடமாக கற்பித்தால் உங்கள் மாணவர்களுக்கு அதனால் பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுத்தர முடியும். அண்மையில் வெளிவந்த சாதாரண தர பரீட்சை முடிவுகளின் பின் மாணவர்கள் எந்தத் துறைக்குப் போவதென குழம்பிப்போயுள்ளார்கள். அவர்களை நல்வழிப்படுத்தி அத்தகைய பாடங்கள் உங்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு ஒரு பாதையைக் காட்டுங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்ல ஒரு பிரஜையை உருவாக்கிய பெருமை தங்களை வந்தடையும்.

கலைப்பிரிவு மாணவர்கள் மட்டுமல்ல, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களும் மனைப்பொருளியலை ஒரு பாடமாகக் கற்கலாம். இது ஒரு விஞ்ஞான ரீதியான கற்கை முறை என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள். இந்திய நாட்டில் மாணவர்கள் மருத்துவத் துறையைத் தெரிவுசெய்த பின்னர், அடுத்துத் தெரிவு செய்வது. இந்த மனைப்பொருளியல் துறையையே. அந்தளவுக்கு அங்கு இப்பாடத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்துள்ளார்கள். அது போன்று இங்கும் இப்பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனை பாடசாலையில் அறிமுகப்படுத்த முன்வாருங்கள். எனவே மாணவர்களே உங்கள் எதிர்காலத்தை யோசித்து, சக மாணவர்கள், நண்பர்கள் தெரிவு செய்வது போன்று நீங்களும் யோசிக்காமல், விருப்பமுடன் புதிய புதிய பாடங்களை தெரிவுசெய்வதன் மூலம் நல்ல முறையில் கற்று தேர்ச்சியடைய முடியும். இப்பாடத்திற்கு பெண்கள் மட்டும்தான் உரித்தானவர்கள் என்று எண்ணுவது தவறு. ஆண்களும் இவற்றைத் தெரிவு செய்யலாம்.

மனைப்பொருளியலில் உள்ள பல பாட அலகுகள் விஞ்ஞானம் சம்பந்தமான பல்வேறு முறைகளை அறிவியல் ரீதியாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

☆ உடற்கூற்றியல் (Physiology),
☆ நுண்ணுயிரியல் (Micro biology),
☆ பிள்ளை விருத்தி (Child development),
☆ உயிரியல் இரசாயனம் (Biochemistry),
☆ புடைவையும் உடையமைத்தலும் (Textile & Clothing),
☆ உணவு விஞ்ஞானம் (Food Science),
☆ மனை நிர்வாகம் (Home management),
☆ போஷாக்கும் உணவும் (Nutrition & Dietetics).

- போன்ற பலவகையான விஞ்ஞான மருத்துவக்கூறுகளை உள்ளடக்கியுள்ளன. என்வே பெண்கள் தான் இந்தப் பாடத்தைக் கற்க உகந்தவர்கள் என்பதைவிட, ஆண்களும் இப் பாடத்தைப் பயிலலாம் என்பது இதனால் தெளிவாகின்றது.

எனவே பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு, நடைமுறையில் உள்ள பாடங்களை மட்டுமல்லாமல், வாழ்க்கைக்கு உகந்த செயற்பாடுகளைக் கொண்ட மனைப்பொருளியல் போன்ற பாடங்களை உங்கள் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கறபிக்க முயற்சி எடுங்கள். இதனால் மாணவர்கள் இவற்றை நாடிவர வழி செய்யுங்கள். அதன் மூலம் பல்கலைககழகம் செல்ல தகுதியற்றவர்கள் நாங்கள் என்ற நோவுடன் ஏங்கித் தவிக்கும் மாணவர்களை அரவணைத்து இத்தகைய மார்க்கத்தில் செல்ல வழிகாட்டுங்கள். ✪


## தேவை

வவுனியா, 2ஆம் குறுக்குத் தெருவில் இயங்கும் பிரபல்யமான வைத்திய நிலையமான மெடிக் கிளினிக் - வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரியும், வைத்திய ஆய்வுகூடப் பரிசோதகரும் (M.L.T.) தேவை. தங்குமிட வசதி உண்டு.

உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**மெடிக் கிளினிக்,**
2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.
T.P.: 024 22582
(3938)



உ

**அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான**

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2002



அம்பிகை அடியார்களே!

மேற்படி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் வைகாசி மாதம் 10ஆம் நாள் (24.05.2002) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வைகாசி மாதம் 18ஆம் நாள் (01.06.2002) சனிக்கிழமை பெரும் பொங்கலுடன் நிறைவடைகிறது.

நாளாந்த உற்சவ காலங்கள்:

பகல் உற்சவம்
1. கிரியைகள் ஆரம்பம் - காலை 9.00 மணி
2. வசந்தமண்டபப் பூஜை - காலை 11.00 மணி
3. திருவிழா நிறைவு - பகல் 1.30 மணி

இரவு உற்சவம்
1. வசந்தமண்டபப் பூஜை - மாலை 6.00 மணி
2. திருவிழா நிறைவு - இரவு - 8.30 மணி

*10. 06. 2002 திங்கட்கிழமை மகா சங்காபிஷேகம்*

பகல்- அபிஷேகம் தொடர்ந்து நண்பகல் அன்னதானம் நடைபெறும்.
மாலை - அம்பாள் எழுந்தருளி வீதி உலாவந்து அடியவர்க்கு திருவருள் பாலிப்பார்.
திருவிழா நிறைவு - இரவு 8.30 மணி

### அறிவித்தல்

கடைகள் அமைத்தல்:
மஹோற்சவ காலங்களில் தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் 22.05.2002 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய முன்வீதியில் சமுகந்தந்து அன்றைய தினமே உற்சவ காலங்களுக்கான முழு வாடகைப் பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று தங்கள் இடங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

*அராலி,*
*ஆவரம்பிட்டி.* (3939) - ஆலய பரிபாலன சபை.



## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம்- வைரமுத்து

மணற்பகுதி, ஆவரங்கால் கிழக்கு,, புத்தூரைச் சேர்ந்த திருமதி பாக்கியம் வைரமுத்து அவர்கள் (18.05.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ச.வைரமுத்துவின் பாசமிகு மனைவியும் சர்வேஸ்வரி, புஸ்பலீலா, வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசேகரம், பத்மலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பூங்குன்றன், சங்கீதா, ஜெயகீதா, வசந்தன், ஜயந்தன், ஜயந்தினி, நிஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நேற்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.3.30 மணியளவில் ஆவரங்கால் கிழக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"வசந்த வாசம்" மணற்பகுதி,*
*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்*

தகவல்:
திருமதி ஞா.சர்வேஸ்வரி,
திருமதி ப.வசந்தாதேவி.
(3936)


## கொட்டடியில் இலவச கணனிப்பயிற்சி

கொழும்புத்துறை,மே20

பாபறா மல்வானி நிறுவனத்தின் அனுசரணையுடன் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இலவச கணனிப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (எ-ரி)

## சனசமூக நிலையங்கள் புனரமைப்பு

ஏழாலை,மே20

ஏழாலை மத்தி சனசமூகநிலையம், ஏழாலை வடக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-ரி)

உதயன்

## பெருகும் அவநம்பிக்கைகள்

சாவகச்சேரி கோவில்குடியிருப்புப் பகுதியில் - கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாக உறுதிசெய்யப்பட்ட பிரதேசத்தில் - மீளக்குடியமர்ந்த சுமார் 50 குடும்பங்கள் இராணுவத்தினரால் மிரட்டி வெளியேற்றப்பட்டிருக்கின்றன.

சமாதான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து முன்னர் வெளியேறிய குடும்பங்கள் இப்போது தங்கள் சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிவரத் தொடங்கியுள்ளன. இவ்வாறு திரும்பிவரும் மக்கள் - குறிப்பாக தென்மராட்சி மக்கள் - உடனடியாகத் தங்கள் இருப்பிடங்களில் குடியமரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் ஒன்று அங்கு மிதிவெடிகள் மற்றும் கண்ணிகள் பூரணமாக அப்புறப்படுத்தப்படாமை. அடுத்தது, சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு இராணுவம் முட்டுக்கட்டை போடுகின்றது.

வலி.வடக்குப் பிரதேசத்தில் இருந்து சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெளியேறிய குடும்பங்கள் இன்னமும் தங்கள் சொந்த இருப்பிடங்களைப் பார்க்கக்கூட முடியவில்லை. தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கேட்டு அந்தக் குடும்பங்கள் அண்மையில் சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளன.

குடாநாட்டில் படையினர் தங்கியுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இருந்து உடனடியாக படைகள் வெளியேறமாட்டா என்று இராணுவத்தரப்பு தெரிவித்துவிட்டது. இதனால் நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு நகரில் படையினர் நிலைகொண்டுள்ள சுமார் 63 பொதுக்கட்டடங்களில் இருந்து இராணுவத்தினர் உடனடியாக விலக்கப்படமாட்டார்கள் என்று மட்டு.மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி அறிவித்துவிட்டார். நிலையான அமைதி, சமாதானம் உருவாகிய பின்னரே படையினர் பொதுக்கட்டடங்களில் இருந்து வெளியேறுவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்ற நிலைமையே யாழ்நகரப் பகுதியிலும் காணப்படுகிறது.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்காக மேலும் 250 சதுரமீற்றர் காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

30 ஆயிரம் மக்கள் வசிக்கும் யாழ்.தீவகப் பிரதேசத்தை அப்படியே ஓர் இராணுவத்தளம் என்று வாதிட்டு வந்த கடற்படை இப்போது - காலங்கடந்து ஞானம் பிறந்ததுபோல் - புலிகள் அங்கு வரலாம் என்று கூறியிருக்கிறது. வடபிராந்திய கடற்படைத் தளபதி இதனை அறிவித்த ஓரிரு நாள்களுக்குள் தீவகத்தின் சில இடங்களில் மூடப்பட்ட கடற்படை முகாம்கள் மீளத் திறக்கப்படுவதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.

அவநம்பிக்கையை உருவாக்கும் வகையில் படைத்தரப்பு மேற்கொள்ளும் இத்தகைய எல்லா நடவடிக்கைகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை செம்மையாக நிறைவேற்றப்படுவதைப் பாதித்திருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இந்த வாரம் 90 தினங்கள் நிறைவடைய உள்ளன.

அரசு - புலிகள் இருதரப்பினருக்கும் இடையே ஒரு நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட யதார்த்தம். அதற்காகவே - இத்தகைய நல்லெண்ணப புறச்சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே - இரு தரப்புகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்துகொண்டன.

ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கையில் காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்தத் தவறுவது - அதற்கு மறுப்பது - முட்டுக்கட்டை போடுவது - வீணான குழப்பங்களுக்கும் ஏன் மீண்டும் போருக்குக் கூட வித்திட்டுவிடலாம்.

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் சம்பவங்கள் இத்தகைய ஐயத்தையே ஏற்படுத்துகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூன்று மாத காலப் பகுதிக்குள் நிறைவேற்ற வேண்டிய அம்சங்களில் இராணுவத்தரப்பு முட்டுக்கட்டை போட்டு நிற்பது சமாதானத்தை அவாவ நிற்கும் தமிழ்மக்கள் மத்தியில் அச்ச உணர்வை உருவாக்கத் தொடங்கியிருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நிறைவேறாமல் முட்டுக்கட்டை போடுவதன்மூலம் ஜூனில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் உத்தேச நேரடிப் பேச்சுக்களைத் தாமதப்படுத்த திரைமறைவில் சதி நடக்கிறதோ என ஐயுற வேண்டியுள்ளது.

இராணுவம் உண்மையில் சமாதானத்தை விரும்புகிறதா? அல்லது இராணுவத்துக்குள் இருக்கும் குழப்பும் சக்திகளின் கை மேலோங்குகின்றதா?

தென்னிலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகளின் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கும் பிரதமர் ரணில் மற்றொரு முனையில் படைகளுக்குள் உள்ள சமாதானத்திற்கு எதிரான சக்திகளின் அழுத்தத்துக்கு உட்படுகிறாரா?

அதிகரித்துவரும் அவநம்பிக்கைகளைக் களைய அவர் என்ன செய்யப்போகிறார்?

பிரதமர் ரணிலிடம் இருந்து தமிழ்மக்கள் இப்போது எதிர்பார்ப்பது இதைத்தான்!

# சமய உண்மைகளை விளக்கிக் கூறுவதில் புராணங்கள் நிகரற்ற பங்கு வகிக்கின்றன

## நூல் வெளியீட்டு விழாவில் கலைப்பீடாதிபதி

வலிமேற்கு,மே20

"இந்து சமயத்தின் மரபில் பக்திநெறியை வளம்படுத்துவதில் புராணங்கள் பெரும் பங்களிக்கின்றன. சமய உண்மைகளைத் தெளிவாக விளங்கவைப்பதில் புராணங்கள் நிகரற்ற பங்குவகிக்கின்றன. இந்தவகையில் இன்று வெளியிடப்படும். விசுவேசர் புராணம் அடுத்த தலைமுறையினருக்கு நல்ல கருவூலமாக அமைந்துள்ளது"

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர்.

வட்டுக்கோட்டை புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார் எழுதிய 'அருள்மிகு விசுவேசர் புராணம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி அரங்கில் இந்நிகழ்வு நடைபெற்றது.

விசுவேசர் புராண ஏடு ஆரம்பத்தில் பண்டிதர் க.மயில்வாகனனார் இல்லத்தில் இருந்து விழா மண்டபத்துக்கு மேள வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

முன்னாள் விரிவுரையாளர் அ.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

புராணங்கள் மக்களது சமய நம்பிக்கைக்கும் வாழ்வியலுக்கும் வழிகாட்டி நிற்கின்றது. திருக்கோயிற் பண்பாட்டிற்கு மூலமாகவும் விளங்குகின்றது. திருக்கோயில் சார்ந்த பண்பாட்டினை எடுத்துக்கூறும் நூல்கள் தல புராணங்கள் எனப்படுகின்றன. தமிழில் எழுந்த புராணங்களைக் கொண்டு எமது சமய மரபின் வளர்ச்சியை நாம் கணிக்கலாம். அத்தகைய தல புராணங்களில் ஒன்றாக இன்று வெளியிடப்படும் விசுவேசர் புராணம் அறிமுகமாகின்றது.

எமது சமய இலக்கிய மரபில் சிறப்பிடம் பெறும் புராண மரபை அடியொற்றி விசுவேசர் புராணம் புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்களினால் எளிய தமிழில் அருமையான நடையில் அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டு ஆக்கப்பட்டுள்ளது. எமது சைவசமய நெறியின் வளர்ச்சிக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகவுள்ளது.

சிவபெருமானின் திருத்தலமாகிய கைலைக்குன்றத்தின் பெருமை பேசப்படுகின்றது. இத்தலபுராணம் விசுவேசர் பெருமையைப் பேசுவதையே பொருளாகக் கொண்டுள்ளது - என்றார்.

இந்நூலின் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்தினார். ஆசியுரையை சிவத்திரு.கா.சிவமூர்த்திக்குருக்களும், வாழ்த்துரையை புலவர்மணி, பண்டிதர் அ.ஆறுமுகமும், பாராட்டுரையை சங்கானைப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி கே.கே.ரஜனியும் நிகழ்த்தினார்கள்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

நூல் ஆசிரியர் பண்டிதர் க.மயில்வாகன்னாரை வைத்திய கலாநிதி கா.சுமந்திரன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். அட்டைப்பட ஓவியர் செ.சிறீலோகநாதன் (கலைமகன்) "ஓவியமணி" என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (க-175)

## விதை வெங்காயம் தட்டுப்பாடு

அரியாலை,மே20

குடாநாட்டில் விதை வெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையில் அதிக அக்கறை காட்டிவருகின்றனர். இதன் காரணமாகவே விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒரு அந்தர் விதை வெங்காயம் தற்போது ஆயிரத்து 750 ரூபா முதல் 2 ஆயிரம் ரூபாவரை விலை போகிறது. (க-17)

### வழமைக்கு மாறாக இம்முறை

## உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கொழும்பில் முதலாம், 2ஆம் திகதிகளில்

கொழும்பு,மே20

இதுவரை காலமும் பாரிஸ் நகரில் நடைபெற்று வந்த ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இம்முறை கொழும்பில் நடைபெறவுள்ளது. ஜூன் முதலாம், 2ஆம் திகதிகளில் இக்கூட்டம் நடைபெறும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும்வரை காத்திருக்காமல் வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கு காலம் தாழ்த்தாது நிதி வழங்கப்படவேண்டும் என சில நாடுகள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் கடந்த வருடக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா எதிர்பார்த்தவாறு நிதி வழங்கப்படவில்லை. தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்பாடு காரணமாக உதவி வழங்கும் நாடுகள் அதிக நிதியை வழங்கும் என ஸ்ரீலங்கா எதிர்பார்க்கிறது.

உதவி வழங்கும் நாடுகள், நாட்டின் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி குறித்து அதிக கவனம் செலுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. யுத்தத்தால் சீரழிந்துபோன பிரதேசத்தை புனரமைக்க நிதி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி நிதியம் ஆகிய நிறுவனங்களும், ஜப்பான், ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு, கனடா, டென்மார்க், ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளனர். (க)

## கிளிநொச்சியில் தமது இருப்பிடங்களை பார்வையிட்டு வருகின்றனர் முஸ்லிம்கள்

கிளிநொச்சி,மே20

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மீளக்குடியமர வசதியாக தமது பழைய இருப்பிடங்களை முஸ்லிம் மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி, முள்ளியவளை ஆகிய இடங்களில் உள்ள தமது பழைய இருப்பிடங்களுக்குச் செல்லும் முஸ்லிம் மக்கள் தமது வீடுகள், காணிகளைப் பார்வையிடுகின்றனர்.

கிளிநொச்சி மற்றும் முள்ளியவளையில் உள்ள பள்ளிவாசல்களுக்கும் அவர்கள் செல்கின்றனர்.

அதேசமயம் -

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் முஸ்லிம் வர்த்தகர்கள் வீதியோரங்களில் பொருள்களைப்போட்டு விற்பனை செய்து வருகின்றனர். (க-3)

### நாளை

வைகாசி 07
செவ்வாய்க்கிழமை
(21.05.2002)
திதி : நவமி
காலை 7.15 வரை.
தசமி
பின்னிரவு 4.49 வரை
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் 11.44 வரை.
கரிநாள்
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம்: 2.52 - 4.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நீங்கள் உங்களைச் சாதாரணமானவராகக் கருத வேண்டாம். ஏனென்றால், இந்த உலகமே உங்களுடைய தேவைக்காக அல்லவா விரிந்து கிடக்கிறது.

## தடை நீக்கம் குறித்து ஆராயவே மேற்கு நாடுகளுக்குச் செல்கிறேன்

### இப்படிக் கூறுகிறார் பிரதமர் ரணில்

கொழும்பு,மே20

இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது குறித்து மேற்கு நாடுகளுடன் ஆராய்வதற்காகவே அங்கு விஜயம் மேற்கொள்கின்றேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் தனியார் தொலைக்காட்சிக்கு கடந்த வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

"விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். தடையை நீக்குவது குறித்து மேற்கு நாடுகளின் அப்பிராயத்தையும் பெறவேண்டியுள்ளது. இதற்காகவே அங்கு. செல்கிறேன்.

புலிகள் மீதான தடை பேச்சு மேசையிலேயே நீக்கப்படும்" - என்றார் அவர். (க-3)

## எமது பொருளாதாரக் கட்டமைப்பை சிதைக்க இடமளிக்க வேண்டாம்

### விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை

அச்சுவேலி,மே20

யாழ்.குடாநாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பைச் சீர்குலைத்து தென்னிலங்கை உற்பத்திப் பொருள்களின் விற்பனைச் சந்தையாக யாழ்ப்பாணத்தை மாற்றும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவேண்டும் என்று அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் சமகால நிலை; தென்னிலங்கை வர்த்தகப் பிரமுகர்களின் யாழ்ப்பாண விஜயம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் மகஜர் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

யாழ்.குடாநாடு கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து நிமிர்ந்து நிற்கின்றது. மக்கள் தமது சுயமுயற்சியாலும் கடும் உழைப்பினாலும் மன உறுதியுடன் களநிலைக்கு ஏற்புடைய பல்வேறு பொருளாதாரக் கட்டமைப்புக்களை உருவாக்கி வாழ்ந்துவருகின்றனர்.

கால்நடை வளர்ப்புக்கு ஊடாக பால் உற்பத்தி, முட்டை, இறைச்சி என்பனவற்றில் சுய தேவையைப் பூர்த்தி செய்துள்ளது. விவசாயத்தில் வளர்ச்சி கண்டுள்ளது. குடும்பக் கைத்தொழில் - குடிசைக் கைத்தொழில் முயற்சிகளில் - மேல்நிலை கண்டுள்ளது.

யாழ்.மாவட்ட மக்களின் கடந்த கால உழைப்பினை சீர்குலைப்பதாகவும், சமகால பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றி அமைப்பதாகவும் தென்னிலங்கை உற்பத்திப்பொருள்கள் விற்பனையை நோக்காகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் குவிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு மகஜரில் வலியுறுத்திக் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு, தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(க-11)

## மருதங்கேணியில் மருத்துவமனை இயங்காததால் மக்கள் சிரமம்

### அரச அதிபருக்கு மகஜர்

வடமராட்சி கிழக்கு,மே20

மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாததினால் அப்பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையிடமும், யாழ். அரச அதிபரிடமும் அப்பகுதி பொது அமைப்புக்கள் மகஜர் மூலம் முறையிட்டுள்ளன.

மருதங்கேணிப் பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக பல மைல்களுக்கப்பாலுள்ள கிளிநொச்சி அல்லது சாவகச்சேரி ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-182)

## நீங்கா நினைவில்.....
## இரண்டாம் ஆண்டு

மகனாக 03 - 12 - 1973

மாவீரனாக 20 - 05 - 2000



### மேஜர் மித்திரன் / கண்ணன்

(புவனேந்திரன் சதீஸ்பாபு, யாழ். கோண்டாவில்)

ஆண்டுகள் நினைவாய் ஓடி மறையினும்
எம் தெய்வ மகனே! உன் வாழ்நாள்
நினைவெங்கள் மனதில் நிலையாக....!

*இறையருள் நாடும் எம் இதயக்காணிக்கை.*

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (3891)

உன்பிரிவின் துயரோடு:
உறவுகள், நண்பர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 12 - 1929

மறைவு 10 - 06 - 2000



### அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரா

*(பிரதம லிகிதர், பெருந்தெருக்கள் திணைக்களம்)*

ஆண்டிரண்டு மறைந்தாலும் ஆறவில்லை எம்மனம்!

*"அன்னவில்லா"*
*உரும்பிராய் வடக்கு.* (3920)

அன்புமனைவி
ம.இந்திரா.

நெஞ்சை விட்டகலா
## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1988 - 12 - 29

மறைவு 2001 - 05 - 30



### செல்வி தர்மகுலசிங்கம் சுஜித்தா

திதி:- 20. 05. 2002

புன்சிரிப்பால் எமைக் கவர்ந்த சுஜியே! அம்மம்மா, அப்பம்மா
இருவரும் உம்மையும் கூட்டிச் சென்றனரோ!"
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

தற்காலிக முகவரி:
*V.A. லேன்,*
*இருபாலை.* (3915)

நிரந்தர முகவரி:
*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.*

பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
அக்கா, உறவினர்கள்.

✝

## நன்றி செலுத்தும் ஆராதனை அழைப்பு

மலர்வு 1956 ♦ 11 ♦ 08

உதிர்வு 2002 ♦ 04 ♦ 20



### அமரர் சகோ.சபாரட்ணம் ஜெகநாதன் *(ஜெகன்)*

ஆண்டவரின் மகிமைக்குள் பிரவேசித்த அன்னாரின் இல்வுலக வாழ்வுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (20.05.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வாராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஐக்கிய மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சித்தன்கேணிச் சந்தி,*
*சித்தன்கேணி.* (3904)

ஜெ.வதனி *(மனைவி)*
மற்றும் குடும்பத்தினர்.

## ஹொக்கி அணி தெரிவு

யாழ்ப்பாணம்,மே20

யாழ். மாவட்ட ஹொக்கி அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ் துரையப்பா ஸ்ரேடியத்தில் இடம்பெறவுள்ளது.

அணி தெரிவுக்கான பயிற்சி தற்சமயம் இடம்பெறுகிறது என்றும் -

அணியில் இடம்பெறவிரும்புபவர்கள் இன்றைய பயிற்சியில் பங்குபற்றலாம் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பங்குத்தந்தை தாக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம்,மே20

யாழ். அடைக்கலமாதா ஆலயப் பங்குத்தந்தை ஆலயப் பணிமனையில் வைத்து இனந்தெரியாத இளைஞர்கள் இருவரால் தாக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் பணிமனைக்குச் சென்ற இனந்தெரியாத இரு இளைஞர்கள் பங்குத் தந்தையை அழைத்ததும் அவர் வெளியே வரவே அவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலின் காரணமாக முகத்தில் காயமடைந்த பங்குத்தந்தை இ.ம.பயஸ் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலீஸாருக்கும் முறையிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கைக்குச் சுற்றுலா சென்றபோது மகியங்கனை ஆற்றில் மூழ்கி இறந்த இரு இளைஞர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு விட்டு வந்து தமது பணிமனையில் பங்குத் தந்தை இருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாவுக்குச் சென்ற குழுவினருடன் பங்குத்தந்தையும் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-10-8-ரி)

## சிங்கள நாடக கலைஞர்கள் யாழ்.வருகை

'சிங்கள நாடகங்களின் தந்தை' எனப் போற்றப்படும் காலஞ்சென்ற பேராசிரியர் எதிரிவீர சரத் சந்திரவால் ஆரம்பிக்கப்பட்ட நாடகக்குழுவின் உறுப்பினர்கள் திருமறைக் கலா மன்ற ஏற்பாட்டில் இம்மாத இறுதியில் கலைப்பயணம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வரும் இவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம் திகதி காலை 10.30 மணி மற்றும் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், 3ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு யாழ்.திருமறைக் கலா மன்ற அரங்கிலும் சிங்கள பாரம்பரிய நாடகமாகிய 'மனமே' என்னும் நாடகத்தை மேடையேற்றவுள்ளனர்.

(ஒ-8)


## இதோ! இதோ!!

### லாலா சோப், சன்சைன் சோப்பின்

ஆரம்பகால வளர்ச்சிக்கு எமது வன்னி மண்ணில் உள்ள மக்கள் மிகவும் உறுதுணையானவர்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு எமது உற்பத்தியை மிகவும் பெரும் சிரமத்தின் மத்தியில் சந்தைப்படுத்த முன்வந்திருக்கின்றோம். ஆகவே, தொடர்ந்தும் எமது சிறுகைத்தொழில் உற்பத்திக்கு முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவீர்களானால் லாலா சோப், சன்சைன் சோப்பை எமது மண்ணில் முன்னிலைக்குக் கொண்டுவரமுடியும். சில வறுமைக்கோட்டில் உள்ள இளைய தலைமுறைகளுக்கு எம்மால் வேலைவாய்ப்பு வழங்கமுடியும்.

## லாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி. (C/22122)


## நீங்காத நினைவுகளுடன் இரண்டாம் ஆண்டில்..



### அமரர் அரியகுட்டி சித்திரவடிவேலு (குகன்)

*(உரிமையாளர் - குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி)*

தோற்றம் 23.10.1927

மறைவு 20.05.2000

நீராகிப்போய் எம்தேகம்
நீரினில் கரைந்தாலும்
நீங்கிடாது அப்பா உங்கள்
நினைவுகள்.

*குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி.* (3909)

-- குடும்பத்தினர்.

## சுபமுகூர்த்த அழைப்பு

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷ வைகாசி மாதம் 08ஆம் திகதி (22.05.2002) புதன்கிழமை சுக்லபக்ஷ ஏகாதசியும் உத்தர நட்ஷத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபதினத்தில் அன்று காலை உதயாதி நாழிகை 10.30இற்கு மேல் 14.30 நாழிகைக்குள் 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள் வரும் கடகலக்கினத்தில்

யாழ்ப்பாணம், காரைநகர்,
மணற்காடு அம்மன் கோயில்
பிரதம குருவாகிய
மறைந்த
பிரம்மஸ்ரீ ச.நாகமுத்து ஐயர் தம்பதிகள்,
கிள்ளான் மலேசியா
திருமதி இ.ஜயாத்துரை குருக்களின்
பௌத்திரியும்
எனது ஏகபுத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**சித்திராவை**



தென் இந்திய கேரள மாநிலம்,
பாலக்காடு, கோட்டயம், சதாபுரம்
கே.பரமேஸ்வர சர்மா
தம்பதிகளின் பௌத்திரனும்
கிருஷ்ணன் கோயில்
பிரதம குரு பிரம்மஸ்ரீ
சுப்பிரமணிய சர்மா தம்பதிகளின்
ஏகபுத்திரனுமாகிய
**பரமேஸ்வர சர்மாவுக்கு**
**(சந்துரு)**

கன்னிகாதான், பாணிக்கிரகண- விவாகஞ் செய்துவைக்க எல்லாம் வல்ல கும்பநாயகி அம்மன் அருளாசியுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி முகூர்த்தம் புதிய கல்பதி பாலக்காடு - 3 ஸ்ரீ மஹாகணபதி கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்பத்துடன் வருகைதந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்:

பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்த சர்மா
ஞா.மகேஸ்வரி
மணற்காடு, காரைநகர், யாழ்ப்பாணம்.

பிரம்மஸ்ரீ கே.பி.சுப்பிரமணிய வாத்தியார்
எஸ்.லஷ்மி
2/502, சதாபுரம், பாலக்காடு,
கேரள மாநிலம், தென் இந்தியா.

(இரு வீட்டார் அழைப்பு)

*E mail: chandru chitra @ hot mail.com.* (3865)

# சான்றோரை மதிக்கும் பண்பு பண்டைத் தமிழரிடம் விஞ்சியிருந்தது

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்து பட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் வெளியாகிவரும் தொடர் கட்டுரையின் மற்றொரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

*'அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை, இருள் சேர்ந்த*
*இன்னா உலகம் புகல்'* (குறள்)

அருள் நிறைந்த மனமுடையோர்; இருள் நிறைந்த துன்ப உலகத்தை ஒளியூட்டி மகிழ்வர் என்பது இதன் பொருளாகும். உயிர்களைப் பாதுகாத்து 'அவற்றின்பால் அருள் செய்வதையே பண்டைத்தமிழர் தம் பண்பாடாகக் கருதினர். இதற்கு எடுத்துக்காட்டாகச் சோழன் குள



முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்ற அரசனுக்கும், மலையமான் என்ற வள்ளலுக்கும் இடையில் ஏற்பட்ட பகைமையையும் புலவர் கோவூர் கிழார் இடைநின்று மொழிந்த அருள்மொழி விளகத்தையும் கூறலாம்.

**அடைக்கலம் கொடுத்தல்**

*சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்* மலையமானோடு பகை கொண்டவன். மலையமானின் பிள்ளைகள் சோழனிடம் அகப்பட்டுக்கொண்டனர். சோழ வேந்தன் மலையமான் மீதிருந்த பழைய பகைமையைச் சிறிதும் மறக்காதவனாக 'இவர் யார்? நம் பகைவன் மலையமான் பெற்ற மக்கள் அல்லரோ? பழிவாங்கும் வாய்ப்புக் கிடைததது. இவர்களைக் கொன்றிடுவேன்' என வன்நெஞ்சம் கொண்டான். தன்குடிப் பிறப்பை முற்றும் மறந்தான். சோழர்குடி அருளுக்குப் பேர் பெற்ற குடி, அடைக்கலம் புகுவாரை அரண்செய்து காக்கும் குடி, அக்குடிப்பிறப்புப் பெருமை மறைந்தது.

**அரசர்களின் பொறுப்பு**

நாட்டை ஆளும் அரசனுக்கு தீமையைக் களைந்து நன்மையைக் காக்கும் கடப்பாடு உண்டு. அவன் கையில் ஒறுப்பு என்னும் பொறுப்புமிக்கக் கடமை அமைந்துள்ளது. அக்கடமையை நிறைவேற்றுங் காலத்தில் தனக்குத் தீங்கு செய்வோன் எவன் எனத் தேடி ஒறுத்தலாகாது. தன் குடிகளுக்குத் தீங்கு செய்வோனையே நாடி ஒறுத்தல் வேண்டும். அங்ஙனம் செய்யும் செயல் பயிரிடும் உழவன் களைபோக்கும் கடமையை நிகர்த்தது. இதனை

*'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட்ட தனொடு நேர்'* (குறள்) என்றதன் மூலம் உணரலாம்.

இங்கே கிள்ளி வளவன் ஒறுக்கமுனைந்த ஒறுப்பு எத்தகையது? தன் குடிகட்கு மலையமான் தீங்கிழைத்தான் என்று எண்ணித் தொடங்கியவனல்ல. தனக்கு ஆகாத பகைவன்' என்று எண்ணியே தொடங்கினான். அன்றியும் மலையமான் தீய பகைவன் என்றே கொள்ளினும், அவன் பெற்ற மக்களாகிய இளஞ்சிறுவர் - குடிகட்குத் தீங்கிளைப்பர் என்றுஎண்ணியது அறிவுடைமையாகாது.

கிள்ளி வளவனின் தன்னல நோக்கம் அறத்தினை அவன் உணராதவாறு நல்லுணர்வைக் கெடுத்தது. கொல்லும் ஆணைபிறந்தது. கொல்ல வந்த யானை அருமை மக்களின் ஆவியைப் போக்கநின்றது. சூழ நின்றோர் அரசனுக்கு அஞ்சி நின்றனர். எனினும் அவர்களுக்கிடையே உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் உத்தமர் ஒருவர் இருந்தார். அவருக்கோ அச்சம் இருக்கவில்லை. அச்சுறுத்துவார்க்கு அடங்கிப் போகும் கோழைத்தனமும் இல்லை. அருள், அன்பு என்ற ஒப்பற்ற நற்பண்புகள் நிறைந்த நன்நெஞ்சமே இருந்தது. அரசனை நெருங்கி நின்று அந்த உத்தமரான கோவூர் கிழார் என்ற புலவர் தம் உள்ளத்தில் எழுந்த உண்மைகளை எடுத்துரைக்கலானார். 'வேந்தே! உன் ஆணையை நிறைவேற்றுமுன் யான் சொல்வன கேட்க; எண்ணிப்பார்க்க, நீ பறவைக்கும் அருள் சுரந்த அருளாளன் மரபில், சோழர்குடியில் பிறந்தவன். நீ கொல்லத் துணிந்த இச்சிறுவரோ புலமை வாழுமாறு வாழ்ந்து, புலவரின் இடுக்கண் கண்டு அஞ்சிய அருளாளன மக்கள். இவர்தம் நிலையை உன்னுக..... இவர்தம் உள்ளத்தே புதுமையான துன்ப உணர்வு உள்ளது என்பதை உணர்க; யான் கூறுவன இவையே; கேட்டனையோ; கேட்டனை ஆயின் நீ விரும்பியது செய்திடுக!' - என்றார.

இவ்வாறு கிள்ளி வளவன் தன்னைப் பற்றி எண்ணுவதை விடுத்துத் தன் குடிப்பிறப்பைப் பற்றி எண்ணுமாறு செய்து அவனுடைய மனதை மாற்ற முயன்றார் கோவூர் கிழார். குடிமையின் பெருமைக்குக் காரணமான அருட்பண்பை நினைவூட்டினார். அரசன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த தன்னலம் ஒழிந்தது. அருள் மேலெழுந்தது. அவன் வேகததைக் கெடுத்து அமைதியையும், அன்பையும் வளர்த்தது. மலையமான் மக்களின் உயிரையும் காத்தது. அருளாளரின் நெஞ்சம் உலகாளும் ஆண்மை மிக்க அரசரையும் திருத்தவல்லது என்பதை இந்த வரலாறு தெளிவுபடுத்துகின்றது.

**அரசர்களின் பெருமையை விதந்து கூறும் புலவர்கள்**

புலவர்கள் உண்மையை உணர்த்தும் ஆற்றல் மிக்கவர்கள்! பண்டைத் தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் பாடலகள், புலவர்களின் பெருமையை உணர்த்துமளவிற்கு அரசர்களின் பெருமைகளையும் உணர்த்தி நிற்கின்றன. தம்மினும் புலவர் சிறப்புடையவர் என்பதையும், நாட்டிற்கு மிக்க பயன் விளைவிக்கும் நல்லியல்பு அமைந்தவர் என்பதையும் உணர்வு சான்ற அரசர்

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களில் தேடிச் சுவைக்கும் திறன் அருகி வரும் தற்காலக் கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டலை இவை கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

அறிந்திருந்தனர். புலன் உழுது உண்ணும் புலவரது புன் கண்ணுக்கு அஞ்சி, அரசன்தம் செல்வத்தைப் பகுத்து உண்ணும் நல்வாழ்க்கையை மேற்கொண்டனர். புலவரின் நல்லுரை கேட்டு அரசர் பலர் உண்மை உணர்ந்து முற்றுகைவிடுத்தனர். போர் தவிர்த்தனர். வெஞ்சினம் தணிந்தனர், ஒறுத்தல் நிறுத்தினர், வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தனர். புலவர் கடுஞ்சொல் கொண்டு கடிந்தபோதும் அரசர் உண்மை தெளிந்து உள்ளம் மகிழ்ந்தனர். அறம் உணர்த்திய அறிவுரைக்காக நன்றி பாராட்டினர். தாமும் புலமைபெற முயன்றனர், புலவராய் பாடவும் செய்தனர், புலமை வாழ்க என்று கொண்டாடினர். புலமையே வாழ்விற்கு ஒளிகாட்டும் சுடர் விளக்கு எனப்போற்றிய அரசர்; அவர் செய்த குற்றம் ஏதேனும் காணின் அதனை அப்போதே மறக்கவும் செய்தனர். இதற்கு எடுத்துக்காட்டாக முரசு கட்டிலில் தூங்கிய மோசிகீரனார் எனும் புலவருக்குக் கவரி வீசி நின்ற காவலனாகிய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்



பொறை என்ற அரசனைப் பண்டைய இலக்கியத்திலே தரிசிக்கின்றோம்.

**சான்றோரை மதிக்கும் பண்பு**

புலவர், புலமையை வளர்த்துப் போற்றினர். உயாந்த எண்ணஙகளை வளர்த்தனர். அதனால் உலகை உய்வித்தனர். நாடாளும் வேந்தரோ, புலவரைப் போற்றி அவர் 'தக்கது இன்னது தகாதது இன்னது' என்று தெரிவித்தவற்றை ஆராய்ந்து சிறந்தவற்றை செய்யும் ஆற்றலை வளர்த்துக் 'குடிதழீயிக் கோலோச்சினர். இதனாலேயே, புலவர்க்கும், அரசர்க்குமிடையே பெருங் கேண்மை நிலவிற்று. இவர்கள் தாய் மொழியை உயிரினும் மேலாகப் போற்றினர். அத்தாய்மொழிப் பற்றே இரும்பொறையைக் கவரி வீசச் செய்தது. இருசாராரும் தாய்மொழியாம் தமிழை உயிரிலும் மேலாக ஓம்பினர். இந்தப் பண்பாடு பண்டைத் தமிழ்நாட்டின் பண்பட்ட பெறுமானங்களாக இருந்து அரசர்களையும் அறிஞர்களையும் அறத்தைக் காக்க வைத்தது.' மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்றும்

**நாக. சண்முகநாதபிள்ளை**

'பெரியாரைத் துணைக் கோடல்' என்றும், 'பண்புடையாளர் கேண்மை' என்றும், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றும் அறிஞர்களையும், சான்றோரையும் மதித்து மாண்புற்றனர் பண்டைத் தமிழர். அருளே மக்களுக்குத் துணையாக நிற்பது. நல்லமுறையில் ஆராய்ந்து நாம் அருளைக் கைக்கொள்ள வேண்டும். உள்ளத்தில் அன்பில்லாதவர்களுக்கு அருள் வாய்க்கப்பெறாது. அன்பும் அருளும் அறமும் பண்பும் பயனுமெல்லாம் பண்புடையாளர் தொடர்பால் கைகூடும்.

*'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அது இன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்'* (குறள்)

ஆட்சியிலும், மனித மாட்சியிலும் பண்டைத்தமிழர் பண்புடைய புலவரையும், புரவலரையும், மதித்து வாழ்ந்தனர். இடைக்காலத்தில் அது இல்லாமல் மண்புக்கு மாய்ந்தது. மீண்டும் அது புதியதொரு பிறப்பாக்கம் பெறுதல் வேண்டும்.

*'குற்றம் இலானாய் குடிசெய்து வாழ்வானைச்*
*சுற்றமாய் சுற்றும் உலகு'* (குறள்)

# நிஹால் கருணாரட்ணவின் சொத்துக் குறித்து விசாரணை

கொழும்பு,மே20

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நிஹால் கருணாரட்ணவின் சொத்துக்கள் குறித்து உரிய விசாரணை நடத்துமாறு கோரி உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

பொலீஸ் உத்தியோகத்தர்கள் சிலர் ஒன்று சேர்ந்து இந்த மகஜரைச் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

லண்டன், கொழும்பு ஆகிய இடங்களில் ஆடம்பரமான வீடுகளைக் கொண்டுள்ள நிஹால் கருணாரட்ண பல மினிபஸ்கள், 100 ஏக்கர் தென்னந்தோட்டம், எரிபொருள் விற்பனை நிலையங்கள் என்பனவற்றையும் சொந்தமாகக் கொண்டுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு தேவைக்கு அதிகமாக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களில் பலர் ஒழுங்காகக் கடமைக்குச் சமுகமளிக்காதிருப்பதுடன், சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

அத்துடன் மேற்படி உத்தியோகத்தரின் மனைவியின் பெயரில் 25 மில்லியன் ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரால் இவ்வாறான சொத்துக்களை எவ்வாறு சேர்த்துக்கொள்ள முடிந்தது. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யாழ். குடாநாட்டில்

# போத்தல்களுக்குத் தட்டுப்பாடு; குளிர்பான தயாரிப்பாளர் சிரமம்!

யாழ்ப்பாணம்,மே20

குடாநாட்டில் உள்ளூர் குளிர்பானங்கள் அடைக்கப்படும் போத்தல்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் உள்ளூர் குளிர்பானத் தயாரிப்பாளர்கள் தமது தயாரிப்புக்களை சந்தைப்படுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதுவரை காலமும் குடாநாட்டில் கவனிப்பாரின்றிக் கிடந்த போத்தல்கள் தரைப் பாதை திறக்கப்பட்டதை யடுத்து தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு வாகனங்களில் தமது வியாபாரப் பொருள்களை எடுத்து வரும் வியாபாரிகள் கூட திரும்பிச் செல்லும்போது போத்தல்களை கொண்டு செல்கின்றனர். இதனால் இங்கு போத்தல்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூரில் தயாரிக்கப்படும் குளிர்பானங்களை அடைப்பதற்கு போதிய போத்தல்கள் கிடைக்காததால் ஏற்படும் காலதாமதம் காரணமாக அவை பழுதடைவதாகவும் - இப்போது உள்ள தரம் குறைந்த மற்றும் சேதமான போத்தல்களில் குளிர்பானங்களை அடைத்தால் விற்பனை பாதிக்கப்படும் என்றும் - குளிர்பானத் தயாரிப்பாளர்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-8)

## விளக்கமறியல் நீடிப்பு

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 13 தமிழ்க் கைதிகளையும் எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ஒ-4)



**நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழா அண்மையில் நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெற்றது.**

**இந்த விழாவில் கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கிய நடன நிகழ்வு சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுடன் நெறியாளர் திருமதி சாந்தினி சிவனேசனும் காணப்படுகிறார்.** (எ)

# பச்சிலைப்பள்ளி பகுதியில் மக்கள் ஒன்றியம் அமைப்பு

தென்மராட்சி,மே20

யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்கு உள்ளான கிளாலி, முகமாலை, இந்திராபுரம், வேம்பொடுகேணி, அரசர்கேணி, இத்தாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இணைந்து "யுத்த அழிவினால் மிகவும் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியம்" என்னும் அமைப்பினை ஆரம்பித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் மீள்குடியமர்வுகள் ஆகியவை பற்றி உரிய தரப்பினருடன கலந்துரையாடுவதற்கு பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் செ. மார்க்கண்டு தலைமையில் 15பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் யுத்த அனர்த்தங்களில் எஞ்சிய வீடுகள் மற்றும் உடைமைகள் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டு வருவதை தடுத்து நிறுதததும்படி விடுதலைப் புலிகளைக் கோருவதென மேற்படி ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

மீளக் குடியமர முடியாத பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு தற்போது தங்கியுள்ள பகுதிகளில் அரை நிரந்தர வசிப்பிடங்களை அமைத்து வழங்குமாறும் -

யுத்தத்தின்போது கடுமையான பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்குமாறும் -

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடச் செல்லும் வேளையில் தேங்காய், விறகு ஆகியவற்றை சிரமமின்றி எடுத்துவர அனுமதிக்க வேண்டுமெனவும் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வலியுறுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஒன்றியச் செயலாளர் க.சண்முகநாதன் தெரிவித்தார். (ஒ-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாடகம்

வானொலியில் "நம்பிக்கைத் துரோகம்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. யாழ்ப்பாணம் 4. இலக்கியக் கட்டுரைகள் 5. 'வீடற்றவன்' நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6. ஒரு காதலின் கதை. (3928)

## தவறிவிட்டது

நெடுந்தீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கோபாலு நிர்மலராஸ் என்பவருடைய தேசிய அ.அ. (712423560V), விசேட அ.அ. (இல.0914001365) மற்றும் அலுவலக அடையாள அட்டை, பாஸ் என்பன புங்குடுதீவு சந்தைபடிக்கும், குறிகாட்டுவானுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3930)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஓவ்செற் மெசின் (Off set machine) லீகல் சைஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: 593, பருத்தித்துறை வீதி, யாழ்.மாநகர சபைக்கு அருகில் நல்லூர். (3890)

உபயோகித்த ஏயர் கொம்பிறெசர் றீபோறிங் மெஷின், வாகன சேவிஸ் மெசின், ஒக்ஸ்போட் கார் கிறாங், B.M.C 4 சிலிண்டர் கிராங், CD125 BENLY மோட்டார் சைக்கிள், 4 ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் ஆகியவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3902)

நல்ல நிலையில் உள்ள SONY (KV 2030) T.V. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.ராஜேந்திரன், புலவனார் வீதி, கல்வியங்காடு. T.P: 2931. (3933)

## கைதடியில் காவலரண்களை பலப்படுத்தும் படையினர்!

கைதடி,மே20

கைதடிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நீண்டகாலமாகக் கைவிடபட்ட நிலையில் காணப்பட்ட காவலரண்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக யாழ். - கண்டி வீதியில் நாவற்குழிப் பகுதியில் வீதியோரமாகவுள்ள பனைமரங்கள் தறிக்கப்பட்டு காவலரண்கள் பலப்படுத்தப்படுகின்றன எனக் கூறப்பட்டது. (எ-ரி)

## பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய புனரமைப்புப் பணிகள்

கொழும்புத்துறை,மே20

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய புனரமைப்புப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. தற்போது வர்ணம் பூசும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1995, 2000ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் இவ்வாலயம் பெரும் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-ரி)

## ஆயுர்வேத வைத்தியசாலை வரணியில்!

வரணி,மே20

சாவகச்சேரி பிரதேச சபையின் சித்த ஆயுர்வேத வைத்திய நிலையம், வரணி பொதுமருத்துவமனைக்கு அண்மையில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

வாரம் தோறும் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மக்கள் தமது நோய்களுக்கான வைத்திய சேவையை இங்கு பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-12-ரி)

## 'கலாபூஷணம்' விண்ணப்பம் கோரப்படுகிறது

வலி.மேற்கு,மே20

'கலாபூஷ்ணம்' விருதுக்கு கலைஞர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைஞர்கள் தத்தமது பிரிவு பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-175)

பல்கலைக்கழக அனுமதி

# ஆசிரியர் விண்ணப்பம்; இறுதிநாள் 30ஆம் திகதி

யாழ்ப்பாணம்,மே20

அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற மற்றும் தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிப்பது தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கிலப் பாடத்துடனான கலைப் பட்டப் பாடநெறி, விஞ்ஞானப்பட்டப் பாடநெறி ஆகியவற்றுக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுநாள் எதிர்வரும் 30ஆம் திகதி ஆகும்.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான மேலதிக விரைங்கள் கடந்த 17ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில்' அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (எ)


## தொழிற்கல்விக்கான 6 மாதகாலப் பயிற்சி வகுப்புகள்

கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✦ தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து
- ✦ ஆங்கில தட்டச்சு பயிற்சி
- ✦ தையல் பயிற்சி
- ✦ பூ வேலை, ஐசிங், தலையலங்காரப் பயிற்சி
- ✦ ஆங்கிலக் கல்வி கற்பித்தல்

இதற்கான விண்ணப்பப்படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 30-05-2002

மக்கள் நலன்காக்கும் பிரிவு,
இருபாலைச் சந்தி,
கோப்பாய். (C/22197) - நிர்வாகம்


## தவறிவிட்டது

இல.43, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தைச் சேர்ந்த **சொக்கலிங்கம் சிவநாயகம்** ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 402461799V), விசேட அடையாள அட்டை (இல.0902023486), மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் வரிப் பத்திரம், சேமிப்புப் புத்தகம் (மக்கள் வங்கி), 2002ஆம் ஆண்டுக்குரிய வரி நிசீற் மற்றும் முக்கிய குறிப்புகள் அடங்கிய டயறி மேலும் பல பத்திரங்களைக் கொண்ட 'பாக்' கந்தர்மடம், அரசடி வீதியில் கந்தர்மடச் சந்திக்கும் இந்துமகளிர் கல்லூரிச் சந்திக்கும் இடையில் 18.05.2002 சனிக்கிழமை அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து காலத்தின் தேவை கருதி மேற்காட்டிய விலாசத்திலோ அல்லது இல.13, பிறவுண் வீதி என்ற விலாசத்திலோ ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (3932)

சொ.சிவநாயகம்

## 31ஆம் நாள் நீங்கா நினைவில்

தோற்றம்
20
✦
05
✦
1969



மறைவு
20
✦
04
✦
2002

வன்னிச்சியம்மன் கோயிலடி வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் துரைச்சாமி கங்கரலிங்கம்

*நிஜமல்ல கனவு போல் இருக்குதையா உன் பிரிவு*
*நீ எம்மைப் பிரிந்து எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*நீங்கா நினைவாய் உன் நினைவு*
*எம் நெஞ்சில் வாழ்ந்திடுமே.*

தகவல்: **இ.லோகநாதன்**
*வன்னிச்சியம்மன் கோயிலடி,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (3927)

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, தாய், சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள்.**

## மரண அறிவித்தல்

### வஸ்தியாம்பிள்ளை சின்னம்மா

ஓட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது அச்சுவேலி சங்கடத்தார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை சின்னம்மா நேற்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சேவியர் மரியாம்பிள்ளை (கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும் மேரி ஜோசேப்பின் (ராஜ்கோ உரிமையாளர்), அன்னம்மா, மரியாம்பிள்ளை, மேரிப்பிள்ளை, மேரிலூட்ஸ் ஆகியோரின் சிறிய தாயாரும் செபஸ்ரின், லூசினா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2002) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று அன்னாரின் இல்லத்தில் இருந்து அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு, புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராஜ்கோ",*
*அச்சுவேலி.* (3931)

தகவல்:
**S.**செபஸ்ரியன் (பேரன்)


தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

**சீக்கோ காஸ் கம்பனியின் ஏக விநியோகஸ்தராக,**

**ஸ்ரீ மோட்டோர் வேக்ஸ்**

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

ஆகிய நாம் நியமிக்கப்பட்டுள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். உங்கள் நிறுவன ஒட்டுதல், வெட்டுதல், பொருத்துதல் போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்தும் ஒட்சிசன், அஸிட்லின், கார்பைட் போன்ற காஸ் வகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(1901) *ஸ்ரீ மோட்டோர் வேக்ஸ்*



**Ceylinco Insurance Company Limited**

*Ceylinco Life Centre, 134, Galle Road,*
*P.O.Box 899, Colombo - 3, Sri Lanka.*
*Tel: 438294-5, 424812-5*
*Telegrams: CEYLINCO Fax: (94-1) 437613*
*Website: www.ceylife.lk*

**சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி (ஆயுள்)**

*இப்பொழுது யாழ்.மண்ணில்*

இலக்கம் 560, ஆஸ்பத்திரி வீதி,
செலான் வங்கி கட்டடம்,
யாழ்ப்பாணம்.

இலங்கை காப்புறுதி வரலாற்றில் முதன் முறையாக 10 மடங்கு காப்புறுதியை வழங்குபவர்கள்.

இப்பொழுதே உங்கள் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

எங்கள் அலுவலகம் சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும். (C/22161)


## கால்நடைத் தீவனங்களின் விலை நிர்ணயம்

**20.05.2002ஆம் திகதி இன்று திங்கட்கிழமை முதல் அங்கத்தவர்களின் நன்மை கருதி கால்நடைத் தீவனங்களைப் பின்வரும் சகாய விலையில் எமது சங்க விற்பனை நிலையத்திலும் கிளை விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

| | | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|---|
| முட்டைத் தீன் | 25 கிலோ | 587.50 | 600.00 |
| வளர்தீன் | 25 கிலோ | 687.50 | 700.00 |
| குஞ்சுத்தீன் | 25 கிலோ | 737.50 | 750.00 |
| புறொயிலர் பிணிசர் | 25 கிலோ | 862.50 | 875.00 |
| புறொயிலர் ஸ்ராட்டர் | 25 கிலோ | 862.50 | 875.00 |
| கறவைப்பசு உணவு | 50 கிலோ | 775.00 | 800.00 |
| கறவைப்பசு உணவு | 25 கிலோ | 387.50 | 400.00 |

**பொது முகாமையாளர்**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (C/22187)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26
☆
12
☆
1936



மறைவு
01
☆
06
☆
2001

### திருமதி தணிகாசலம் சின்னமணி

*தெள்ளு தவத்தால் எம்மைப் புவியில் பெற்றெடுத்து.*
*தேனமுதம் ஊட்டி இரு கரத்தால் ஏந்தி,*
*கலையூட்டி, மதியூட்டி செல்வமெல்லாம் பெற்று*
*புகழ் விளங்க வழிகாட்டிய அன்னையே!*
*மண்ணில் வாழும் காலம்வரை விடிவெள்ளியாய்*
*வழிகாட்டும் அம்மா!*

நாளை (21.05.2002) செவ்வாய்க்கிழமை குடத்தனையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ள முதலாம் ஆண்டு நினைவஞ்சலி வைபவத்தில் உற்றார், உறவினர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*குடத்தனை வடக்கு,*
*குடத்தனை.* (3904)

**த.மகிமதாஸ், த.தர்மதாஸ்**
(மகன்மார்).

# மூன்று மாநகரசபைகள் உட்பட 17 மன்றங்களுக்கு இன்று தேர்தல்

கொழும்பு,மே20

மூன்று மாநகர சபைகள், 4 நகர சபைகள், 10 பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல் இன்று நடைபெறும். காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெறும்.

இந்த 17 உள்ளூராட்சி மன்றங்களி லும் 11,31,777 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றனர். மொத்தம் 825 வாக்களிப்பு நிலையங்கள் உள் ளன. தேர்தல் நடைபெறும் உள்ளூ ராட்சி மன்றங்கள் வருமாறு:

மாநகரசபைகள்: கொழும்பு, காலி, இரத்தினபுரி.

நகர சபைகள்: கட்டுநாயக்க, சீதுவ, பேலியாகொடை, பாணந்துறை, தங்காலை.

பிரதேச சபைகள்: கெஸ்பாவ, களுத்துறை, அம்பகமுவ, நாத்தாண் டிய, திரப்பனை, மிகிந்தலை, ஹாலி -எல, மொனறாகலை, புத்தள, இரத் தினபுரி.

வாக்குகள் எண்ணும் பணி மாலை 6 மணியளவில் ஆரம்பமாகும் என வும் - முடிவுகள் இரவில் அறிவிக் கப்படும் எனவும் -

தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் சொன்னார். (ம)

## தவறி வீழ்ந்து படுகாயம்

யாழ்ப்பாணம்,மே20

உயரமான கட்டடம் ஒன்றில் இருந்து தவறிவீழ்ந்த ஒருவர் படு காயமடைந்தார்.

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சதாசிவம் கமலநாதன் (வயது31) என்பவரே படுகாயமடைந்த வராவார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (ம-15)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,மே20

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மக ளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இநநிகழ்வில் தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ் ணன் பிரதம விருந்தினராகவும், வேலணைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சோ.தில்லை நாதன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பாட சாலையின் ஓய்வுபெற்ற அதிபர் ம. சுப்பிரமணியம், ஓய்வுபெற்ற உப அதிபர் ஏ.தியாகராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர். (க-ரி)

## நியமனம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராக ரி. விஜயகுமார் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவினால் நிய மனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தற்போது பல்கலைக்கழகத் தின் பரீட்சைகளும், அனுமதிகளும் பகுதிக்கான பொறுப்புக்களை ஏற்றுள் ளார். (எ-ரி)

# குடாநாட்டில் மீண்டும் 'காஸ்'மூலம் ஒட்டும் பணி

யாழ்ப்பாணம்,மே20

யாழ். குடாநாட்டுப் பகுதியில் மண்டும் 'காஸ்' மூலம் ஒட்டு வேலை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

யுத்த நடவடிக்கைகள் காரண மாக கடந்த காலங்களில் ரான்ஸ் போமர்மூலம் ஒட்டுவதே நடைமுறை யில் இருந்துவந்தது. இதனால் சாதா ரண வலுக்குறைந்த இரும்பு, உருக்கு, பித்தளைப் பொருள்களை ஒட்டமுடி யாத நிலை ஏற்பட்டது. இதனால் அவை உடைந்ததும் பாவனையில் இருந்து கழித்து வைக்கப்பட்டு வந்தன.

தற்போது தரைவழிப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து கொழும் பில் இருந்து, இப்படியான ஒட்டு வேலைகளை மேற்கொள்ளப் பயன் படுத்தப்பட்டுவந்த ஒட்சிசன், அசற் லீன் 'காஸ்' சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. (ம-15)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே20

பருத்தித்துறை ஆத்திசூடிப் பிள் ளையார் கோயில் வருடாந்த உற்ச வம் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 நாள்கள் நடை பெறும் இவ்வாலய உற்சவ நிகழ் வில் எதிர்வரும் 25ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவ மும் நடைபெறும். (ம-15)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த கும்பாபிஷேக தினம் எதிர்வரும் புதன் கிழமை காலை 9மணிக்கு நடை பெறும். அன்றைய தினம் 1008 சங் காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

பிற்பகல் 4.30 மணிக்கு திருவூஞ் சல் நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் நடைபெறும். (ம-180)

## வருடாந்த உற்சவம்

**சுண்டுக்குளி - மருதடி அருள்மிகு எழும் விநாயகர் ஆலய**

வருடாந்த அலங்கார உற்சவம், நிகழும் சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 8 ஆம் திகதி 22.05.2002இல் ஆரம்பமாகித் தொடர்ந்து 31.05.2002வரை (10 தினங்கள்) நடைபெறும்.

தினமும் மாலை 3.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகளின் பின் எம்பெருமான் வெளிவீதியுலா வருவார். பக்தர்கள் வந்து எம்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறும் வண்ணம் வேண்டுகிறோம்.

(3941) - ஆலய நிர்வாகி.

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

மறைந்த ஆஸ்தானக் கவிஞர்

**யாழ். ஜெயம் (ம.விக்ரர்)**

அவர்களின்

**முதல் வருட நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும்**



நாள் : நாளை (21.05.2002) செவ்வாய்க்கிழமை

நேரம் : மாலை 4.30 மணி

இடம் : மன்ற கலைத்தூது மணிமண்டபம்

நினைவுரைகளுடன் சிறப்பு நிகழ்வாக அமரர் யாழ். ஜெயம் அவர்களின் தேடலில் உருவான 'தேடிக் குவித்த திரவியங்கள்' சிந்தனைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* - திருமறைக் கலாமன்றம். (C/22201)


**நிறைஞ்சனாஸ்** சங்கானை

LEONARD DIC APRIO

KATE WINSLET

**டைட்டானிக்** (தமிழாக்கம்)

காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C-22147)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சில தினங்களுக்கு மட்டும் சரத்குமார், அபிராமி, முரளி, மனோஜ் நடித்த

**சமுத்திரம்** (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்) (3917)

**ராஜா** யாழ்ப்பாணம்

6ஆவது ஜனத்திரள் வாரம்

இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த

**தமிழன்**

தினசரி: 10.30, 2.30

சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.) (C/22146)

## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

இந்தியாவில் இருந்து விஷேடமாகத் தருவிக்கப்பட்ட சீனி (Sugar) மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இது தவிர பலசரக்குப் பொருள்கள், பால்மா வகைகள், சோப் வகைகள், பிஸ்கட் வகைகள், சமையல் வாயு (Shell Gas) அனைத்தையும் நீங்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய இடங்கள்:

**S.V.முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**CITY AGENCY**
158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/22196)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்ணில் 29 . 07 . 1929



விண்ணில் 20 . 04 . 2002

**அமரர் கணபதி செல்லையா**

*(பிரபல கட்டட ஒப்பந்தகாரர், சங்கானை)*

'வெள்ளத் துளையமலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் துளைய துயர்வு'

அன்னாரது பிரிவால் துயருற்றிருந்த வேளையில் ஆறுதல் கூறி ஒத்துழைப்புகள் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், இன்று (20.05.2002) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

*தகவல்:*
*செ.கண்ணன் (மகன்)*
*அராலி வீதி, சங்கானை* (C/22200)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

**தம்பிப்பிள்ளை சிவசண்முகநாதன் (லக்கி)**

காரைநகர் சடையாளியைப் பிறப்பிடமாகவும் முத்தையன்கட்டு இடது கரையை வசிப்பிடமாகவும்கொண்ட தம்பிப்பிள்ளை சிவசண்முகநாதன் (லக்கி முதலாளி, மலர்களஞ்சியம், இடதுகரை) நேற்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை சடையாளி காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சௌந்தராம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் தெய்வநாயகி (சாந்தி), காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் லோகராணி தனலட்சுமி, யோகமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஸ்ரீசண்முகநாதன் (சன்)
(மருமகன்)

*சடையாளி,*
*காரைநகர்.* (3942)


I B M S

**IBMS DOUBLE + SCHOLARSHIP PROGRAM 2002/2003**

*Apply Before : 24-05-2002*

*Scholarship Exam on 01-06-2002*

*Classes Commence on 08-06-2002*

Phone - 021-3165 e mail - ibms@sltnet.lk

விபரங்கட்கு :-

11.05.2002 உதயன் விளம்பர இணைப்பு
OR
தலைமை காரியாலயத்துடன் அல்லது கிளைநிறுவனங்களுடன் தொடர்புகொள்ளவும்.

Institute of Business Management Studies



Head Office :- No.701,K.K.S Road, Jaffna.
Branches :- Main Road, Chankanai.
N.M.M.V Road, Nelliyadi.

# ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதை உடனடியாகத் துரிதப்படுத்துங்கள்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,மே20

சமாதான முயற்சிகளில் தேவையற்ற தாமதம் ஏற்பட்டு வருகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல்களில் படையினர் ஈடுபட்டுவருவது கவலையளிக்கிறது. படையினரின் இத்தகைய செயல்களைக் கணடிப்பதுடன், புரிந்துணர்வு உடன் படிக்கையை நடைமுறைப்படுத்துவதைத் துரிதப்படுத்துமாறும், இனியும் இவ்வாறான மீறல்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத் துமாறும் அரசிடம் வலியுறுத்துகின்றோம்.

- இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி நடத்தவுள்ள அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஏற்கனவே தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளுடன் மேற்படி கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் த.மகாசிவம் தெரிவிததார்.

அவர்கள் முன்வைத்துள்ள ஏனைய இரு கோரிக்கைகளும் வருமாறு:-

படையினர் நிலைகொண்டுள்ள பாடசாலைகள், வணக்கத்தலங்கள், பொது இடங்கள் என்பவற்றில் இருந்து புரிந்துணர்வு ஒப்பந்தப்படி 90 நாள்களுக்குள் அவர்கள் வெளியேறி இருககவேண்டும். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனை நாம் வன்மையாக கண்டிப்பதுடன், உடனடியாக அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோருகின்றோம்.

புலிகளுடன் பேசியே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற விடயம் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. எனவே, புலிகளுடனான நேரடிப் பேச்சை ஆரம்பிக்கக் கூடிய வகையில புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

மாவட்டக்கிளைகளில் இருந்தும் சங்கத்தின் சாதாரண உறுப்பினர்களிடமும் இருந்தும் விடுக்கப்பட்ட பலத்த கோரிக்கையை அடுத்தே தமது போராட்டத்துக்கான கோரிக்கைகளில் இவற்றையும் சேர்த்துக்கொண்டதாக த.மகாசிவம் மேலும் தெரிவித்தார். (ம)

---

## அடுத்த மாதம் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும் படையினர் அங்கிருந்து வெளியேறவேண்டும். ஆனால் அவர்கள் வெளியேறவில்லை.

பாடசாலைகளிலிருந்து படையினர் படிப்படியாக வெளியேறி 160 நாள்களில் முற்றாக வெளியேறிவிடவேண்டும். பொதுக் கட்டடங்களிலிருந்தும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் அட்டவணைப்படி 160 நாள்களுக்குள் படையினர் வெளியேறவேண்டும்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி 90 நாள்களாகியும் பாடசாலைகளிலிருந்தும் பொதுக் கட்டடங்களிலிருந்தும் படையினர் "குறிப்பிடக்கூடிய விதத்தில் வெளியேறவில்லை.

கடற்படையினர் கடலில் மட்டுமன்றித் தரையிலும் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி யாழ். தீவுப் பகுதிகளில் புலிகள் அரசியல் பணியை மேற்கொள்வதற்காக அங்கே செல்ல கடற்படையினர் அனுமதிக்கிறார்கள் இல்லை.

விமானப் படையினர் ஆளில்லா வேவு விமானங்களை முதலில் வன்னியிலும் இப்போது தென்மராட்சியிலும் பறக்கவிட்டு மக்களைப் பதற்றம் அடையச் செய்துவருகின்றனர்.

மீனவர்கள் தமது ஜீவனோபாயத்துக்கு ஆழ்கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் அவர்களை அனுமதிக்க மறுக்கிறார்கள்.

தடை சிறிது தளர்த்தப்பட்ட இடங்களிலும் கடற்படையினர் ஏதோ காரணங்களைச் சொல்லி அதை மீண்டும் நடைமுறைப்படுத்துகிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்ற மாதிரியே முப்படையினரும் நடந்து வருகிறார்கள்.

முப்படையினருக்கும் தலைவி ஜனாதிபதி. ஆனால், புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்து கொண்டவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அதைப் படையினர் சுட்டிக் காட்டுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் மட்டுமல்லாமல் பிரதமரின் சில பேச்சுக்களும் தமிழ்மக்கள் ஆரம்பத்தில் வைத்திருந்த நம்பிக்கையை மழுங்கடிக்கச் செய்கின்றன. தாயகக் கொள்கையைத் தம்மால் ஏற்கமுடியாது என்று பிரதமர் கூறியிருக்கிறார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. பிரதமர் அவற்றை மறுக்கவில்லை.

இடைக்கால நிர்வாகம் பற்றியும் சந்தேகம் ஏற்படுத்தும் விதத்தில் பிரதமர் கருத்துத் தெரிவித்திருக்கிறார் - என்றார் பாலசிங்கம்.

இவை பற்றியெல்லாம் நோர்வே அனுசரணைக் குழுவிடம் தாம் முக்கியமாகக் கூறப்போவதாக அவர் தெரிவித்தார்.

இவற்றிற்கெல்லாம் நோர்வே அனுசரணைக்குழு அரசாங்கத்திடமிருந்து சரியான பதிலைப் பெற்றுத்தரவேண்டும். அது மட்டுமல்ல, புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்றார் அன்ரன் பாலசிங்கம்.

அப்படியானால் பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி ஜூனில் தாய்லாந்தில் நடைபெறாதா என்று கேட்டபோது - அது அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்றார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன், எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரி ரொம்ஸ்ரால் ஆகியோரே எதிர்வரும் புதன்கிழமை அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் அவரது இல்லத்தில் சந்திக்கவுள்ளனர். (ஐ)

---

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு புதுடில்லி செல்லும் அமைச்சர் ஹக்கீம், கொழும்புக்கும் சென்னைக்கும் இடையிலான பயணிகள் சொகுசு கப்பல் சேவையை ஆரம்பிப்பது பற்றியும் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

கப்பல் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான பயணக் கட்டணங்கள் கணிசமான அளவு குறைவதுடன, தென்னிந்தியாவில் வாழ்ந்துவரும் சுமார் 2 லட்சம் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திரும்பி அனுப்பவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-10)

---

## படையினர் சிரமதானம்

மண்டைதீவு,மே20

நேற்று மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கடற்படையினர் சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர்.

பாடசாலை [illegible], பாடசாலை சுற்றாடல் என்பன சுத்தம் செய்யப்பட்டதுடன் சுற்றாடலில் காணப்பட்ட பற்றை, செடிகளும் அகற்றப்பட்டன.

மண்டைதீவு பொதுசனத் தொடர்பதிகாரி தயானந்த் தலைமையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கடற் படையினர் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தளபாடங்கள் சிலவற்றுக்கு தீந்தைபூசும் பணியிலும் இவர்கள் ஈடுபட்டனர். பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் இப்பணியில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். மண்டைதீவுக் கடற்படைக் கட்டளை அதிகாரி நசாந்தவும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்திலும் "வேலு சுமண" கடற்படை தின கொண்டாட்டத்தின் போது இவ் வித்தியாலயத்தில் இத்தகைய சிரமதானப் பணி கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டது. நேற்று மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணி எதிர்வரும் வெசாக் பண்டிகை தொடர்பானதென கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

---

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள்

கோண்டாவில்,மே20

வட இலங்கை சங்கீத சபையினால் வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் பரீட்சைகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் செயன்முறைப் பரீட்சைகளும், செப்ரெம்பர் மாதம் அறிமுகப் பரீட்சையும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

---

## பாலர் பாடசாலை பலத்த சேதம்

கைதடி,மே20

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கைதடி கலைநகர் ஜான் பாலர் பாடசாலைக் கட்டடம் கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால் மேற்படி பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் மரநிழலில் இருந்து பல்வேறு சிரமங்களின் மத்தியில் கல்வியைத் தொடர்கின்றனர். (எ-ரி)

---

## நல்லூர் தேரடியில் புராணபடனம்

கல்வியங்காடு,மே20

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேரடியில் தினமும் கந்தபுராண படனம் இடம்பெற்று வருகிறது.

பண்டிதர் கார்த்திகேசு விநாசித்தம்பி தலைமையில் நடைபெற்று வரும் இந்த புராணபடன நிகழ்வில் அடியவர்கள் பலரும் பங்கு பற்றி வருகின்றனர். (எ-ரி)


New opportunity for Computer Studies

File Edit View Favorites Tools Help

Back Forward Stop Refresh Home Search Favorites History Mail Print

Address http://www.barbara.com/ Go Links

**The Barbara Mulvaney**
**Computer Training center**
123, Temple Road, Jaffna

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்தும் ஐ.நா.வின் அபிவிருத்தி மேற்பார்வையின் கீழ் இயங்கும் பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிறுவனமானது தனது சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் சிறப்புச் சலுகை கட்டணத்துடன் இருபாலாருக்குமான கணனிப்பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளது.

**Diploma Courses**

Diploma in Microsoft Office ( 4 months)
Diploma in Desktop Publishing ( 4 months)
Diploma in Information Technology ( 4months )
Diploma in Software application ( 4months )




Diploma in Photo Graphic (3 months)
Diploma in Programming (4 months)
Diploma in Kids Course (3 months)
Diploma in Studio Designing (3 months




**Certificate Courses**

Auto CAD 2000 | Adobe Page Maker 6.5
Corel DRAW 9 | Microsoft Visual Basic 6
Adobe Photo shop | Microsoft Word
Microsoft Excel | Microsoft Access

**Kids Courses**

Batch 1- age 5 - 10
Batch 11 - age 11 - 15

வகுப்புக்கள் யாவும் 27-5-2002 அன்று ஆரம்பமாக இருப்பதால் 25-5-2002 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

நிர்வாகம்

My Computer



**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு
1. நுண்அறிவு 2. மொழி அறிவு
ஆசிரியர்: யாழ்.திரு.அ.குமாரவேல்
ஆரம்பம்: 21.05.2002 3.30p.m பிரிவுI
NOTE: 100 மாணவர்களுக்கு மட்டும் முதல் பிரிவில் அனுமதி வழங்கப்படும் (3937)



**SUBRA (14)**
சித்தன்கேணி.
**2004 A/L**
புதிய பிரிவு
23.05.2002 இல் ஆரம்பம்
**O/L Day Class**
பிரிவுII
ஆரம்பம்:
23.05.2002 காலை 7.00
☆திறமையான ஆசிரியர் குழு.
☆மாணவரின் பெறுபேறு உடனுக்குடன் அறிவிக்கப்படும்.
☆தூர இட மாணவரின் நன்மை கருதி விடுதி வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (C-22172)



**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
பிறிமா இன பேடு, புறொயிலர் ஒருநாள் குஞ்சுகள் என்பனவற்றை எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
மாருதி ரெக்ஸ்
இல.1, பஜார் வீதி,
யாழ்ப்பாணம். (3934)
சிற்றி காமென்ஸ்
535A, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 3453


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.